27.01.2025 - திங்கட்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 78 குரோதி வருடம் தை மாதம் 14 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 27 பக்கங்கள் - 12






## நெல் கொள்வனவுக்கு 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு



நெல் கொள்வனவுக்காக இவ்வாண்டு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹோமாகம,பிடிபன பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்ற ஜனாதிபதி, நெல் கொள்முதல் செய்வதற்காக ஒரு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட அதிகபட்ச தொகை இதுவெனவும் குறிப்பிட்டார்.

02 →

## பலாலி அமைதிப்படை நினைவிடத்தில் அஞ்சலி





இந்தியாவின் 76வது குடியரசு தினமான நேற்று பலாலியில் உள்ள இந்திய அமைதிகாக்கும் படையினரின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்திய உதவித் தூதுவர் சாய் முரளி யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் யஹம்பத் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். (பு.கஜிந்தன்)

# பொலிஸ் திணைக்களத்தில் 29,000 விசாரணை கோவைகள் தேக்கம்

## துரிதப்படுத்தி நிர்வகிக்க புதிய நடைமுறை

## ஜனாதிபதி மாளிகைகளை மூடவும் தீர்மானம்



(கனூஷியா புஷ்பகுமார்)

பொலிஸ் விசாரணைகளில் 29,000 கோப்புகள் சிக்கியிருப்பதை பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் இருந்து நிர்வகிப்பது சாத்தியமில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளதாகவும், இது குறித்து பொலிஸ் ஆணைக்குழுவிடம் தெரிவித்து, பொலிஸாருக்கு புதிய கட்டமைப்பை உருவாக்கியதாகவும் ஜனாதிபதி கூறினார்.

குற்றப் புலனாய்வுத் துறையின் கீழ் மேலும் பல பிரிவுகள் உருவாக்கப்படும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி இதற்காக புதிய துணைப் பொலிஸ் மா அதிபர்கள் தேவை என்றும் தெரிவித்தார்.

நிதிக் குற்றங்கள்,கொலைகள்,போதைப்பொருள் குற்றங்கள் போன்றவை

02 →

## 4,500 மெற்றிக் தொன் உப்பு இந்தியாவிலிருந்து இறக்குமதி

### இன்று இலங்கை வந்தடையும்

(கனூஷியா புஷ்பகுமார்)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 4,500 மெட்ரிக் தொன் உப்பு தொகையை ஏற்றிய கப்பல் இன்று (27) நாட்டுக்கு வந்தடையவுள்ளதாக இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

நாட்டில் நிலவும் உப்புத் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக 30,000 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அண்மையில் அமைச்சரவை அங்கீகரித்ததையடுத்து அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது.

02 →

### தாஜுதீன், லசந்த, எக்னெலிகொட கொலைகள்

## அரசியல் தலையீடுகளின்றி விசாரணைகள் ஆரம்பம்

வசீம் தாஜுதீன் கொலை, லசந்த விக்ரமதுங்க கொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட கடந்த காலத்தில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பான முடிக்கப்படாத விசாரணைகளை மீள தொடங்கியுள்ளதாகவும் அவற்றை எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

02 →

### கொழும்பு - காங்கேசன்துறை

## 31 முதல் தினசரி இரவு ரயில் சேவை



கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசன்துறைக்கு இடையிலான இரவு தபால் ரயில் சேவையை தினசரி இயக்குவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி இம்மாதம் 31ஆம் திகதி முதல் தினசரி இவ்இரவு தபால் ரயில் சேவை நடத்தப்படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

02 →

## கொழும்பு துறைமுகத்தில் தேங்கிய கொள்கலன்கள் இன்று விடுவிப்பு




கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள கணிசமான எண்ணிக்கையிலான கொள்கலன்கள் இன்று (27) விடுவிக்கப்படும் என சுங்கத் துறை தெரிவித்துள்ளது.

இந்த வார இறுதியில் சுங்க அதிகாரிகளின் தொடர்ச்சியான பணியில் ஈடுபட்டுள்ள காரணத்தினால், இந்த நடவடிக்கைகளை

02 →

### 17 சுயேச்சைக் குழுக்கள் ஒன்றிணைவு:

## ஐக்கிய தமிழ் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் உதயம்



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட 17 சுயேச்சைக் குழுக்களை ஒன்றிணைத்து ஐக்கிய தமிழர் ஒன்றியம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அங்குரார்ப்பண நிகழ்வு தொடர்பில் சுயேச்சை குழு 12இன் முதன்மை வேட்பாளர் சிறீந்திரன் கருத்து தெரிவிக்கையில், தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்

02 →

## தொடரும் அத்துமீறல்; 33 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 33 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

தலைமன்னாருக்கு வடக்கே உள்ள கடல் பகுதியில் கடற்படையினர் நேற்று (26) காலை மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் வந்த மூன்று படகுகளையும் கைப்பற்றியதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

02 →






இந்தியாவின் 76ஆவது குடியரசு தினவிழா டில்லியில் நேற்று (26) நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்திய இராணுவத்தினரின் கலாசாரப் பாரம்பரியமும், இராணுவ வலிமையும் காட்சிப்படுத்தப்பட்டது. இராணுவ ஊர்தியொன்று அணிவகுத்துச் செல்வதை படத்தில் காணலாம்.

## நுகர்வோர் விவகார அதிகாரசபை சுற்றிவளைப்பு: 207 மில்.அபராதம்

(கனூஷியா புஷ்பகுமார்)

நுகர்வோர் விவகார அதிகாரசபை மூலம் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 207 மில்லியனுக்கும் அதிகமான அபராதங்களை விதித்துள்ளது.

அதன்படி, 24,761 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு 23,953 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களின் விவரங்களைக் குறிப்பிடாமை, விவரங்களை மாற்றாமை,

02 →

## கிழக்கில் பட்டதாரி ஆசிரியர் நியமனம்: 250 பேர் தெரிவு!

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் நிலவும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக கடந்த வருடம் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் இரண்டாம் கட்டமாக 250 பேருக்கு நியமனம் வழங்கப்படுவதற்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் ஒப்பத்துடன் இப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான நேர்முகப் பரீட்சைகடந்த16,17,18ம்திகதிகளில் கிழக்கு மாகா ணத்தில் இடம் பெற்றது. இந்நேர்முகப்பரீட்சைக்கு 1105 பட்டதாரிகள் நேர்முக பரீட்சை, பிரயோக பரீட்சை என்பவற்றுக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

02 →

# அரச ஊழியர்களுக்கு நியாயமான அடிப்படைச் சம்பள அதிகரிப்பு





## அரச சேவையின் சரியான தரவு கட்டமைப்பொன்று ஜூன் மாதத்திற்குள் தயாரிக்கப்படும்

பொதுமக்கள் உரிமை என்ற வகையிலும் அரச அதிகாரிகளின் பொறுப்பு என்ற வகையிலும் அரச சேவையை பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப்படை சம்பள அதிகரிப்பு முன்மொழிவுகள் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தற்போதுள்ள அரச சேவையில் நாட்டு மக்கள் திருப்தியடையவில்லை என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசாங்க சேவையை டிஜிட்டல் மயமாக்குவதன் ஊடாக மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் நேற்று (26) நடைபெற்ற அநுராதபுர மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் அரச சேவையில் சரியான தரவு கட்டமைப்பொன்றை தயாரிப்பதற்கு செயலாற்றி வருவதாகவும், தற்போது அரச சேவையில் உள்ள தரவுகளின் அடிப்படையில் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கான இயலுமை இல்லை எனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அரச ஊழியர்களுக்கான நியாயமான அடிப்படை சம்பள அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரண்பாடுகளை மூன்று வருடங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான முன்மொழிவுகள் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

அரச சேவையை வலுப்படுத்துவது மற்றும் அரச சேவைக்கான செலவை நிர்வகிப்பதன் அவசியம் குறித்து இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில், அரச சேவையில் காணப்படும் அத்தியாவசியமான 30,000 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பான நிதி ஒதுக்கீடுகளுக்கான முன்மொழிவுகளை இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் முன்வைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. தொழில்நுட்ப காரணங்களால் நேர்முகப் பரீட்சைகள் தாமதமாகக்கூடிய வெற்றிடங்கள் குறித்தும் இங்கு ஆலோசிக்கப்பட்டதுடன், ஒருங்கிணைந்த அரச சேவை மூலம் மனிதவளத்தை சரியான முறையில் முகாமைத்துவம் செய்வது குறித்தும் கவனச் செலுத்தப்பட்டது.

அநுராதபுரம் மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம், காட்டு யானைகள் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், "ஊவைல டீசயனெைப" முறையை பயன்படுத்தி அனுராதபுரத்தை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றுவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## நாடளாவிய ரீதியில் அரச நிறுவனங்களில் மொழிபெயர்ப்பாளர்களுக்கு பற்றாக்குறை

(கனுஷியா புஷ்பகுமார்)

அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக பல அரச நிறுவனங்களில் மொழிக் கொள்கையை கையாள முடியாமல் போயுள்ளதாக இலங்கை மொழிபெயர்ப்பு சேவைகள் சங்கத்தின் செயலாளர் சுஜித்.எஸ். அமரசிங்க தெரிவித்தார்.

தற்போது நாடளாவிய ரீதியில் 295 மொழிபெயர்ப்பாளர்கள் மாத்திரமே காணப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், அரச சேவையிலும் தற்போது சிங்கள – தமிழ் மற்றும் தமிழ்– சிங்கள மொழிபெயர்ப்பை மேற்கொள்ளும் 35 அதிகாரிகள் மாத்திரமே உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சுமார் 700 மொழிபெயர்ப்பாளர்கள் காணப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரச மொழி சிங்களம், தமிழ் ஆக காணப்பட்டாலும் கூட இதுவரையில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் சிங்களம், தமிழ் மொழிபெயர்ப்பு இளங்கலை பட்டம் கூட இல்லையென அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், நீதிமன்றங்களில் வழக்கு நடவடிக்கைகள் சேகரிக்கப்படுவதற்கும் மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையே காரணம் எனவும் மொழி பெயர்ப்பு சேவைகளுக்கு அரசாங்கம் செலுத்தும் சம்பளம் போதுமாக இல்லாததால் புதிதாக சேவையில் இணைய யாரும் முன்வருவதில்லை எனவும் கூறிய அவர் இது பாரதூரமான ஒரு நிலை எனவும் தெரிவித்தார்



## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### பொலிஸ் திணைக்களத்தில்...

தனித்தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகள் மீது அரசாங்கம் முழு நம்பிக்கை கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதேவேளை,கொழும்பு மற்றும் கண்டியில் காணப்படும் இரு ஜனாதிபதி மாளிகைகளை தவிர்த்து அனைத்து ஜனாதிபதி மாளிகைகளையும் வேறு தேவைகளுக்காக பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அவற்றை ஹோட்டல்கள் அல்லது கல்வி நிறுவனங்களுக்காக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதன்படி, அவற்றின் இருப்பிடம் மற்றும் பொருத்தத்தின் அடிப்படையில் அவை எந்த நோக்கத்திற்கு ஏற்றவை என்பதை அரசாங்கம் மிக விரைவில் தீர்மானிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைச்சரவையின் தீர்மானத்தின்படி, பொது நிர்வாக அமைச்சகம் அறிக்கைகளைக் கோரியுள்ளது.எனவே, அந்த இரண்டை மட்டுமே அவர் வைத்துக்கொண்டு மற்ற அனைத்தையும் பிற தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் என தெரியவந்துள்ளது.

### நெல் கொள்வனவுக்கு...

மேலும் கருத்து தெரிவித்த அவர், "நெல் கொள்முதல் செய்ய 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஒரு அரசாங்கம் ஒதுக்கிய மிகப்பெரிய தொகை இதுவாகும்.

நாங்கள் எங்கள் நெல் களஞ்சியசாலைகள் அனைத்தையும் புதுப்பித்து வருகிறோம். எங்களது களஞ்சியசாலைகள் 300,000 கொள்ளளவு கொண்டவை, ஆனால் அவற்றில் 300,000 கொள்ளளவுக்கான நெல்லை எங்களால் கொள்வனவு செய்ய முடியாது. ஆனால் அந்தக் களஞ்சியசாலைகளை தனியார் துறை அரிசி சேகரிப்பாளர்களிடம் கொடுக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

அதன் பின்னர் அவர்கள் நெல்லை எடுத்து எங்கள் களஞ்சியசாலைகளில் சேமித்து வைப்பார்கள். அரிசியின் அளவு நமக்குத் தெரியும். இலங்கையில் அரிசி ஆலைகளை நடத்தும் அனைத்து நெல் சேகரிப்பாளர்கள் மற்றும் வணிகர்களையும் அரசாங்கத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டு, செய்தித்தாளில் ஒரு விளம்பரம் செய்தோம்.

அரசாங்கத்தில் பதிவு செய்யப்படாத எவரும் இனிமேல் நெல் இருப்புகளைச் சேகரிக்க முடியாது.அவ்வாறு பதிவு செய்ததன் பின்னர் எவ்வளவு அரிசி சேமித்து வைக்கப்பட்டுள்ளது என்பது குறித்து வாராந்திர அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்" என்றார்.

### 4500 மெற்றிக் தொன் உப்பு...

அதன்படி, இந்தியாவில் இரண்டு விநியோகஸ்தர்களுக்கு இலங்கைக்கு உப்பு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் , ஜனவரி 31ஆம் திகதிக்குள் 12,500 மெட்ரிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளது.

### அரசியல் தலையீடுகளின்றி...

சில விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், சில சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், கடந்த காலங்களில் நடந்த அனைத்து குற்றங்கள் குறித்தும் விசாரணைகளைத் தொடங்கி குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதாக உறுதியளித்தார்.

இந்த விசாரணைகள் அனைத்தும் அரசியல் நலன்களின் அடிப்படையில் நடத்தப்படுவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், குற்றவியல் மற்றும் நிதி குற்றங்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் எந்த அரசியல் தலையீடும் இல்லாமல் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### தொடரும் அத்துமீறல்..

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் கரைக்கு கொண்டு வந்த பின்னர், மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் மற்றும் இந்திய கடற்றொழிலாளர்கள் (33) இரணைதீவுக்கு கொண்டு வரப்பட்டு, அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி மீன்வள உதவி பணிப்பாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### கிழக்கில் பட்டதாரி...

தற்போது வெளியிடப்பட்ட நியமனப் பட்டியலின்படி 52 சிங்கள மொழி மூல பட்டதாரிகளும் தமிழ் மொழி மூலம் 198 பேரும் ஆசிரியர் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து 60 பேரும் மட்டக்களப்பிலிருந்து 93 பேரும் திருமலையிலிருந்து 97 பேரும் தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நுகர்வோர் விவகார அதிகாரசபை...

விலைகளை மறைத்தல் உள்ளிட்ட நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தை மீறி வர்த்தகர்கள் செய்த மீறல்கள் தொடர்பாக இந்த சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஐக்கிய தமிழ் ஒன்றியம் ...

தேசிய தலைமைகளில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக தென்னிலங்கை கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை உருவானது.

இந்நிலை எதிர்காலத்தில் தவிர்க்கப்படுவதற்காக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சை குழுக்களாகப் போட்டியிட்ட 17 சுயேச்சை குழுக்களின் முதன்மை வேட்பாளர் ஒன்றிணைந்து ஐக்கிய தமிழர் ஒன்றியமாக அங்குரார்ப்பணம் செய்து உள்ளோம்.

தமிழ் மக்களின் அரசியல் பொருளாதார இலக்குகளை முன்வைத்து எமது பயணம் முன்னோக்கிச் செல்லும் என்றார்.

சுயேச்சை குழு 15 இல் போட்டியிட்ட முதன்மை வேட்பாளர் செந்தில்மதி கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் எதிர்பார்த்த இலக்குகளை தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் செய்யவில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டு. இதன் காரணமாக சுயேச்சை குழுக்களாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தரப்புகளை ஒன்றிணைத்து தமிழ் மக்களின் வாக்குகளை எதிர்காலத்தில் சிதறடிக்காமல் மக்கள் பலத்தைக் காட்டுவதற்காக ஒன்றிணைந்துள்ளோம்.

யாழ். தேர்தல் தொகுதியில் முதற்கட்டமாக 17 சுயேச்சை குழுக்களை ஒன்றிணைத்து எமது பயணத்தை ஆரம்பித்துள்ளோம். வடமாகாணம், கிழக்கு மாகாணம், மலையகம் மற்றும் கொழும்பை ஒன்றிணைத்து ஐக்கிய தமிழர் ஒன்றியமாக எமது செயற்பாடுகளை விரிவுபடுத்தவுள்ளோம்.

எமது இந்த அமைப்பில் இணைந்து பயணிக்க விரும்புபவர்கள் இல 1793 கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்ற முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் தொடர்புகொள்ள முடியும் என்றார்.

### கொழும்பு துறைமுகத்தில்...

விரைவாக மேற்கொள்ள முடியும் என்று சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கோட தெரிவித்தார்.

எனினும், கொள்கலன்களை உடனடியாக விடுவிப்பதற்கு ஏனைய தரப்பினரின் உதவியும் தேவை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

### 31 முதல் தினசரி..

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து இரவு 8:00 மணிக்கு புறப்படும் ரயில் மறுநாள் அதிகாலை 4:35 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தை சென்றடையும். காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இருந்து இரவு 8.00 மணிக்கு புறப்படும் ரயில் மறுநாள் அதிகாலை 4.40 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பிரதேச செயலக மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்தின் சேவை வழங்கும் திட்டம்

## பெப்ரவரி 7இல் ஆரம்பம்

மக்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்கும் நோக்கில் ஜனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலக மட்டத்தில் சேவை வழங்கும் வேலைத்திட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி அலரி மாளிகையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கொழும்பில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதி நிதிய அலுவலகத்தின் சேவைகளை நாடளாவிய ரீதியில் உள்ள 361 பிரதேச செயலக அலுவலகங்களிலும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளன.

ஐந்து பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டு, இது தொடர்பில் முன்னோடித்




திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் இத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி நிதியம் தொடர்பில் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கும் வகையில் ஜனாதிபதி அலுவலகத்தில் (25) இடம்பெற்ற இணையம் மூலமான கலந்துரையாடலின் போதே இந்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி நிதியத்திற்கு புதிய டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வலையமைப்பு வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் ஊடாக மக்களுக்கு மிகவும் வினைத்திறன் மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்காக செயலாற்றி வருவதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே தெரிவித்தார்.

இதனூடாக எவராயினும் தமது பிரதேச செயலகத்தின் ஊடாக நோயக்கு அமைவான கொடுப்பனவிற்கு விண்ணப்பிக்க முடியும். மேலும், அது தொடர்பான ஆவணங்களை பிரதேச செயலகத்தினால் உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும்.

நோயாளர்களை தெரிவு செய்யும் முறை, அவர்களின் ஆவணங்களை தயாரிக்கும் முறை, ஜனாதிபதி நிதியத்தின் பொறுப்பு என்பன தொடர்பில் இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 14ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்**: இன்று நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள்.

**ரிஷபம்**: இன்று சற்று கடினமான சூழ்நிலைகள் காணப்படும்.

**மிதுனம்**: இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும்.

**கடகம்**: இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**சிம்மம்**: இன்று அதிகப் பணிகள் காணப்படும்.

**கன்னி**: இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.

**துலாம்**: இன்று மன வலிமை நிறைந்து காணப்படும்.

**விருச்சிகம்**: உங்கள் இலக்குகளை அடைய இந்த நாள் அனுகூலமானது.

**தனுசு**: இன்று அசௌகரியமான நாளாக உணர்வீர்கள்.

**மகரம்**: இன்று தேவையில்லாமல் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்**: இன்று அனைத்து விதத்திலும் சிறப்பான நாள்.

**மீனம்**: இன்று சாதகமான பலன்கள் கிட்டும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று இரவு 08:29 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.
**நட்சத்திரம்:** இன்று காலை 08:55 வரை மூலம் பின்பு பூராடம்.
**யோகம்:** அமிர்த,சித்த.
**சந்திராஷ்டமம்:** மிருகசீரிஷம்.
**சூலம்:** கிழக்கு.
**இராகு காலம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.
**குளிகை:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**எமகண்டம்:** 10:30 PM முதல் 12:00 PM வரை.

# யோஷித ராஜபக்சவுக்கு விளக்கமறியல்



(கனுஷியா புஷ்பகுமார்)

பெலியத்த பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (25) காலை கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச இன்று(27) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதை உறுதிப்படுத்தினார்.

நேற்று முன்தினம் (25) காலை பெலியத்த பகுதியில் கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ச, கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுத் துறை தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு நீண்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் சந்தேக நபர் நேற்று மாலை குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் கொழும்பு கூடுதல் நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

யோஷித ராஜபக்சவை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் சாட்சியங்களை சமர்ப்பித்து, சந்தேக நபரை பிணையில் விடுவிக்குமாறு கோரினர்.

இருப்பினும், பிணை கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள், சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதால், பிணை, கோரிக்கைக்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த கூடுதல் நீதவான், சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். சட்டவிரோதமாகப் பெற்ற வருமானத்தைப் பயன்படுத்தி ரத்மலானை பகுதியில் நிலம் மற்றும் வீடு வாங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்சவுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு, நேற்று முன்தினம் (25) காலை குற்றப் புலனாய்வுத் துறையினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

# நவீன கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன ரக கைத்துப்பாக்கி, அதன் மகசின் மற்றும் ஐந்து தோட்டாக்களை வைத்திருந்த ஒரு நபரை மொரகஹஹேன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கஹதுடுவ பொலிஸ் பிரிவிற்குற்பட்ட மாகம்மான பகுதியில் சனிக்கிழமை (25) அன்று நடத்தப்பட்ட சோதனையின் போது, சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். பின்னர், மேலதிக நடவடிக்கைகளுக்காக சந்தேகநபர் கஹதுடுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம, மாகம்மானவில் வசிக்கும் 43 வயதான சந்தேக நபரே கைது செய்யப்பட்டு தற்போது விசாரணையில் உள்ளார்.


சம்பவம் குறித்து கஹதுடுவ மற்றும் மொரகஹஹேன பொலிஸ் நிலையங்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

# சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க மேலும் சில ரயில் சேவைகள் ஆரம்பம்

சுற்றுலாத் துறையை முன்னேற்றுவதற்காக தூர பயண சேவைக்காக புதிய புகையிரத சேவைகள் சிலவற்றை ஆரம்பிப்பதற்கு புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. மலையகப் புகையிரத மார்க்கத்தில் பயணிகள் மத்தியில் காணப்படும் அதிக கேள்வி காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி எல்ல ஒடிசி – கண்டி மற்றும் எல்ல ஒடிசி – நானுஓயா என புதிய புகையிரத சேவைகள் இரண்டை பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், பெப்ரவரி 10ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் எல்ல ஒடிசி – கொழும்பு புகையிரதத்திற்கு மேலதிகமாக இந்த சேவையை நடைமுறைப்படுத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எல்ல ஒடிசி – கண்டி புகையிரதம் பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் கண்டி மற்றும் தெம்மோதரை இடையே பயணிக்கக் கூடியதாக இருக்கும்.



எல்ல ஒடிசி – நானுஓயா புகையிரதம் பெப்ரவரி 10 ஆம் திகதியில் இருந்து, திங்கட்கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் நானு ஓயா மற்றும் பதுளை இடையே பயணிக்கவுள்ளது.

அது தவிர ஜனவரி 31 ஆம் திகதியில் இருந்து கொழும்பு மற்றும் காங்கேசந்துறை இடையேயான இரவு தபால் புகையிரத சேவை தினமும் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

# சுமந்திரனுக்கு மெய்ப்பாதுகாவலர்கள் ?

இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம். சுமந்திரனின் பாதுகாப்புக்கு இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் வழங்கப்பட்டுள்ளமையானது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்த பின்னர் அரச செலவினங்களை குறைக்கும் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டது.

அந்தவகையில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மெய்ப்பாதுகாவலர்களின் பாதுகாப்பினை



பெற்றுக் கொள்ளவில்லை.

இருப்பினும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக காணப்படுகின்ற எம்.ஏ.சுமந்திரனுக்கு இரண்டு மெய்ப்பாதுகாவலர்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# காலி சிறைச்சாலையில் மோதல்; 4 கைதிகள் காயம்





காலி சிறைச்சாலையில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் கைதிகள் நால்வர் காயமடைந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி.திசாநாயக்க தெரிவித்தார். காயமடைந்த 4 பேரும் சிகிச்சைக்காக காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# உணவுப் பாதுகாப்பு குறித்த அடிப்படை மதிப்பீட்டு அறிக்கை கையளிப்பு





(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

உணவு உரிமைகள், உணவுப் பாதுகாப்பு குறித்த அடிப்படை மதிப்பீட்டு அறிக்கை மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உணவு உரிமைகள், உணவுப் பாதுகாப்பு குறித்த அடிப்படை மதிப்பீடு பியன் (குஜயுடூ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில் வீட்டு உணவுப் பாதுகாப்பின்மை, உணவு முறைமைகளை 20 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆறுமாத காலம் மேற்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையே கையளிக்கப்பட்டுள்ளது.

போஷாக்குத் தொடர்பாக 1500 இற்கும் மேற்பட்டவர்களிடம் கருத்துகள் பெறப்பட்டு விவரங்களை உள்ளடக்கியதாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறந்த உணவு அனுகலை மக்கள் மத்தியில் மேம்படுத்துவதற்கும், ஊட்டச்சத்துக் குறைபாடுகளைக் குறைப்பதற்கும், சமமான உணவு முறைகளை நிறுவுவதற்கும் இந்த ஆய்வு உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வறிக்கை கையளிக்கும் நிகழ்வில் பியன் நிறுவன உணவு தொழில்நுட்ப நிபுணர் எம். மொஹமட் பஸ்லி, கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் அமுதினி சுகிர்தன் உட்பட உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## சிறிய சிறிய நகர்வுகளும் மாற்றத்திற்கு வழிவகுக்கும்

நாளுக்கு நாள் இலங்கையின் அரசியல் களம் சூடு பிடித்து வருகிறது. தினம் தினம் அரங்கேறும் அரசியல் நிகழ்வுகளில் புதிய அரசாங்கத்தின் நகர்வு எவ்வாறு இருக்கிறது என்பதில் மக்களும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி அதிக அவதானம் செலுத்தி வருகின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரை தொடர்பில் அண்மைய தினங்களாக அதிகளவில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய ஆட்சியாளர்கள் தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளுக்கும், தற்போது செயற்படும் விதத்துக்கும் இடையிலான இடைவெளியை சுட்டிக்காட்டி இந்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

உண்மையிலேயே, தமது வாக்குகளால் ஆட்சியமைத்திருக்கும் அரசாங்கம் தொடர்பில் மக்கள் அவதானமாக இருப்பது வரவேற்கத்தக்க ஒரு விடயம். 76 வருடங்களாக ஆட்சியாளர்கள் ஊழலால் மக்களை ஏமாற்றி வந்ததன் பெறுபேறாகவே மக்கள் புதிய ஆட்சியாளரை தெரிவு செய்தனர். ஆக, பெறுமதியான மக்கள் வாக்குகளால் தெரிவான அரசாங்கத்தின் செயல்பாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கும், அவற்றை விமர்சிப்பதற்கும் மக்களுக்கு உரிமை உண்டு.

இவ்வாறான பின்னணியிலேயே, அண்மைய தினங்களாக தேசிய மக்கள் சக்தியினரின் சில தீர்மானங்கள் குறித்தும், அரசாங்கத்தின் அமைச்சர்களின் உரைகள் குறித்தும் சமூக வலைத்தளங்களில் அதிக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் ஓரிரு விடயங்கள் சிந்திக்க தக்கவையாக இருந்தாலும் கூட அவற்றை வைத்து நாம் ஒரு இறுதி தீர்மானத்துக்கு வந்துவிட முடியாது. வந்துவிடவும் கூடாது.

இந்த விமர்சனங்களுக்கு மத்தியிலேயே, உள்நாட்டுப் போரை நிறைவுக்கு கொண்டு வந்ததாக மார் தட்டிக் கொள்ளும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ 25ஆம் திகதி காலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்றத்தில் அவரை சனிக்கிழமை ஆஜர் செய்த போது, 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

25ஆம் திகதி காலை பெலியத்த பகுதியில் கைது செய்யப்பட்ட யோஷித ராஜபக்ஷ , கொழும்பில் உள்ள குற்றப் புலனாய்வுத் துறை தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு நீண்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

யோஷித ராஜபக்ஷவின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் சாட்சியங்களை சமர்ப்பித்து, சந்தேக நபரை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்த போதிலும் கூட பிணை கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள், சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதால், பிணை கோரிக்கைக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

சட்டவிரோதமாகப் பெற்ற வருமானத்தைப் பயன்படுத்தி ரத்மலானை பகுதியில் நிலம் மற்றும் வீடு வாங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ வுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு, குற்றப் புலனாய்வுத் துறையினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் நகர்வுகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பவர்களை ஒரு கணம் அமைதியைத் தழுவச் செய்துள்ளது. இந்த சம்பவத்தின் பின்னர் அண்மைய காலமாக தேசிய மக்கள் சக்திக்கு எதிராக குரல் எழுப்பிய பல அரசியல்வாதிகளும் அச்சத்தில் உள்ளதாக தெரியவருகிறது.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தேர்தலுக்கான பிரசாரங்களை ஆரம்பித்திருந்தது. அந்த அனைத்து தேர்தல் பிரசார மேடைகளிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வலுவான ஒரு விடயத்தை முன்வைத்தது. தொடர்ந்தும் முன்வைத்து வருகிறது. அதுதான் ஊழல்வாதிகள் யாராக இருந்தாலும் தகுதி தராதரம் பாராது தண்டிக்கப்படுவார்கள் என்பது.

யோஷித ராஜபக்ஷவின் கைது, முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளில் குறைக்கப்பட்டமை ஆகியவற்றை இதன் வெளிப்பாடாக நாம் பார்க்க முடியும்.

எனவே, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஊழலுக்கும், ஊழல்வாதிகளுக்கும் எதிராக செயற்படுவதை மாற்றமாக நாம் எடுத்துக்கொள்ள முடியும்.

புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கீழ் அநேகமானோர் (அப்பாவிகள்) விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்றொரு விமர்சனமும் ஒரு புறம் இருக்கத்தான் செய்கிறது.

“ஊழல்” காலங்காலமாக இலங்கையில் தலைதூக்கியிருக்கும் ஒரு அசுரன் என்றால் அது சரியாக இருக்கும்.

மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கி, பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு மக்கள் வாக்குகளைப் பெற்று ஆட்சியமைத்து விட்டு இறுதியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து மக்கள் வரிப் பணத்தையே சுரண்டும் அளவுக்கு அதிகாரம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டது.

இதுவரை காலமாக, நமது அரசியல்வாதிகள் வித்தியாசமாக நடந்து கொண்டனர். வளங்களைப் பொருட்படுத்தாமல் அவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வழங்கினர். அதிக சலுகைகளை உறுதியளித்தவர்களுக்கு வாக்காளர்கள் வாக்களித்தனர்.

ஊழலை விடவும் நடைமுறைக்கு மாறான வாக்குறுதிகளை நிறைவேற்றியதால்தான் நாடு வங்கு ரோத்து நிலையை அடைந்தது. ஆக, இவ்வாறு நடைமுறைக்கு வாக்குறுதிகளை அளித்தவர்களுக்கு கண்மூடித்தனமாக வாக்களித்த நாமும், இந்தக் குற்றச்சாட்டில் பங்கெடுக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி நிறைவேற்ற முடியாத பல வாக்குறுதிகளை அளித்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது. எனினும், சிறிய நகர்வுகளை வரவேற்றால் நிச்சயம் அது ஒரு பாரிய மாற்றத்துக்கு வழிவகுக்கும் என்பது ஊர்ஜிதம்.

# ரவூப் ஹக்கீம் மீது அரசுக்கு ஏன் இந்த கோபம்..?

> முன்னைய நிலைப்பாட்டில் இருந்து கடுகளவும் மாறாத அரசு



எம்.என்.எம். யஸீர்
அறபாத் (பீ.ஏ) - ஓட்டமாவடி

ஆட்சிபீடமேறுவதற்காக பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசிய தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடமேறிய பின்னர் வாக்குறுதிகளுக்கு என்னாச்சு? எனக்கேட்டால் கதை சொல்லி மழுப்புவதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகிறது.

வாங்குரோத்தடைந்து வீழ்ந்த நாடு என்று அறியாமலா அவ்வளவு வீர வசனங்களை தேர்தல் மேடைகளில் வாக்குறுதிகளாக முழங்கினார்கள்? வென்ற பின்னர் எதையெல்லாம் கடந்த அரசாங்கத்தின் பிழை என்றார்களோ, அதனையே பின் தொடர்வதைக்காண முடிகின்றது.

தேங்காய், அரசி, உப்பு என்ற வரிசையில் மீனும் இறக்குமதி செய்ய வரும் என்றளவுக்கு அமைச்சர்கள் கருத்துத்தெரிவிப்பதையும் தட்டுப்பாட்டுக்கான காரணங்களாக ஆட்சியாளர் சொல்லும் காரணங்களும் நகைப்புக்குரியவை.

நேற்று ஒன்று நாளை வேறொன்று என மாற்றி மாற்றி கதை சொல்லும் அரசாங்கத்தின் அண்மைக்கால போக்கை அவதானித்த ரவூப் ஹக்கீம், முக்கியமான சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பினார். இதனால் அடிக்கடி ரவூப் ஹக்கீமோடு அரச தரப்பு மோதிக் கொள்வதைப் பார்க்கலாம்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவை அரசியலமைப்பு பேரவைக்கு நியமிப்பதற்கு ரவூப் ஹக்கீம் அரசாங்கத்திடம் தொடுத்த கேள்வி தான் காரணமாக அமைந்தது.

வெள்ள அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கான நஷ்டயீடு விவகாரத்திலும் அரசாங்கம் முன்னர் அறிவித்த தொகையை விட மேலும் அதிகரிக்க முன்வந்ததுக்கும் நாடாளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் பேச்சுக்களே காரணமாக அமைந்தன.

அதேநேரம், ரோஹிங்கிய அகதிகள் விடயத்திலும் அரசாங்கத்தின் போக்கு முன்னைய அரசாங்கத்தின் போக்கை விட மாற்றமாக இருந்தது. ரோஹிங்கிய அகதிகளை மீண்டும் மியன்மாருக்கு அனுப்பும் அரச உயர் தலைவர்களின் கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் சர்வதேச அரங்கில் நாட்டுக்கு அவப்பெயர் ஏற்படுமென்பதோடு ரோஹிங்கிய அகதிகள் மியன்மாரில் அனுபவிக்கும் கொடுமைகளை உணர்ந்து அவர்கள் விடயத்தில் அரசாங்கம் மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கில் இவ்விடயத்தில் அரசாங்கத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ரோஹிங்கிய அகதிகள் விடயத்தில் அண்மையில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையைக் கொண்டு வந்தார்.

குறித்த பிரேரணையில் ரோஹிங்கிய அகதிகள் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த போது அவர்களை பத்திரமாக மீட்டு வந்த இலங்கை கடற்படைக்கு தனது கட்சி சார்பாக நன்றிகளைத் தெரிவித்ததோடு, கடந்த காலங்களிலும் இவ்வாறு கொடுமைக்குள்ளாகி உயிர் வாழும் நோக்கில் வெளிநாடுகளை நோக்கிச்சென்ற ரோஹிங்கிய அகதிகள் திருப்பியனுப்பப்பட்ட நிலையில் இலங்கைக்கு வந்த அகதிகள் விடயத்தில் கடந்த ஆட்சியாளர்கள் மனிதாபிமான அடிப்படையில் நடந்து கொண்டதைச் சுட்டிக்காட்டி, ஐக்கிய நாடுகளின் (சமவாயங்கள்) தொடர்பாகவும் கவனஞ்செலுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

> அகதிகள் பிரச்சினையை மக்கள் மயப்படுத்தியவர் என்ற குற்றச்சாட்டு ஹக்கீம் மீது

இவ்விடயங்களைப்பேசும் போது அரசாங்கம் தன்னுடைய முந்தைய நிலைப்பாட்டில் மாற்றங்கள் வந்திருக்குமென நம்புவதாகவும் தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

இதற்கு தங்களின் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டிய அரசாங்கம் ரவூப் ஹக்கீம் இனவாதம் பேசியது போன்று அரச தரப்பு உரைகளை ஆற்றியதை காண முடிந்தது.

உண்மையில் அரச தரப்பு ஒவ்வொரு கருத்தாக வெளியிட்டுக்கொண்டிருப்பதால் அதன் உண்மைத் தன்மையை



அறிந்து கொள்ளவும், ரோஹிங்கிய அகதிகளை மீண்டும் மியன்மாருக்கும் அனுப்புவதால் ஏற்படும் விளைவுகளையுமே தெளிவுபடுத்துவதாக தனது பிரேரணையைக் கொண்டு வந்தார். இந்நிலையில், அரசாங்கம் தாங்கள் இனவாத அடிப்படையில் செயற்படவில்லை என்று சொல்லிக்கொண்டாலும் முஸ்லிம்கள் விடயத்தில் (அமைச்சரவை நியமனம் உட்பட) அரசாங்கத்தின் செயல் அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லையென்ற விமர்சனம் இந்த அரசாங்கத்தை ஆதரித்த முஸ்லிம் மக்கள் வெளிப்படுத்துவதைக்காண முடிகின்றது.

அது போன்று ரோஹிங்கிய அகதிகள் முஸ்லிம்களாக இருப்பதால் அரசாங்கம் அவர்களைத் திரும்ப மியன்மாருக்கு அனுப்ப முற்படுகிறதா? என்ற கேள்வியும் அரச முக்கிய அமைச்சர்களின் கருத்து வெளியீடுகளும் அதனை அடிப்படையாகக்கொண்டு ஏனையவர்களும் குறித்த அகதிகளை ஆபத்தானவர்களாக சித்தரிக்க முயற்சிப்பதையும் காண முடிந்தது.

இந்நிலையில் குறித்த பிரேரணை அரசாங்கத்திற்கு ரவூப் ஹக்கீம் மீது கோபத்தை ஏற்படுத்தவே அரச தரப்பு பாராளுமன்றத்தில் கொந்தளித்தது.

இதனைப்பார்க்கும் போது சில விடயங்களை உணர முடிந்தது.

அரச தரப்பில் தெரிவு செய்யப்படும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் செயற்பாட்டை நியாயப்படுத்தவும் அவர்களின் முடிவுக்கு கட்டுப்படுபவர்களாகவும் இருப்பார்கள் என்ற தேர்தல் காலங்களின் முன்வைத்த கருத்தை உண்மைப்படுத்துவதாகவே காண முடிந்தது.

இவ்விவாதத்தில் பேசிய அரச தரப்பு குறித்த பிரேரணை இனவாத நோக்கம் கொண்டதாகச் சித்தரிக்க முற்பட்டதோடு, ரோஹிங்கிய அகதிகளைத் திரும்ப மியன்மாருக்கு அனுப்பும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை என்ற விடயத்தைச் சொன்னார்கள்.

அப்படியென்றால், ரவூப் ஹக்கீம் ஏன் பிரேரணை கொண்டு வர வேண்டுமென்ற கேள்வி வரலாம். அதற்கு அரசாங்க பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்ர பேசும் போது, ரோஹிங்கிய அகதிகள் விடயத்தில் மூன்று கருத்துகள் இருந்ததாகக் குறிப்பிட்டார்.

ரோஹிங்கிய அகதிகளைத்திரும்ப மியன்மாருக்கு அனுப்புதல், நாட்டில் வைத்திருத்தல், பாதுகாப்பான வேறு நாடுகளுக்கு அனுப்புதல் போன்ற கருத்திருந்ததாகவும், இது கருத்து மாத்திரமே. தீர்மானமில்லை என்பதோடு, ரோஹிங்கிய அகதிகளை மீண்டும் மியன்மாருக்கு அனுப்பமாட்டோம் என்ற செய்தியையும் சொன்னார்.

> ரோஹிங்கிய அகதிகள் விடயத்தை சாணக்கியமாக வென்ற ஹக்கீம்

அரச முக்கிய தலைவர்களிடமும் அமைச்சர்களிடமும் ரோஹிங்கிய அகதிகளை மீண்டும் மியன்மாருக்கு அனுப்பும் எண்ணமிருப்பதை அறிந்ததால் அதை அரசாங்கம் தீர்மானமாகக் கொண்டு வந்து விடக்கூடாதென்ற நோக்கத்தில் மனிதாபிமான அடிப்படையில் தான் ரவூப் ஹக்கீம் குறித்த பிரேரணையைக் கொண்டு வந்தார்.

குறித்த பிரச்சினையை ரவூப் ஹக்கீம் மக்கள் மயப்படுத்தியதால் தாங்கள் குறித்த விடயத்தில் தீர்மானங்களை வெளியிட வேண்டிய ஒரு சூழலை ரவூப் ஹக்கீம் ஏற்படுத்தி விட்டார் என்பதனால் ஆத்திரமடைந்த அரச தரப்பு ரவூப் ஹக்கீமை நோக்கி விரல் நீட்டிப்பேசியதைக் காண முடிந்தது.

கடந்த ஆட்சிகளில் ஆளுங்கட்சியாக இருந்த போது அன்று வருகை தந்த ரோஹிங்கிய அகதிகள் அச்சுறுத்தலுக்குள்ளான போது என்ன செய்தீர்கள் என்றும் கேட்டார்.

உண்மையில் குறித்த கேள்விக்கு தக்கபதிலடியை ரவூப் ஹக்கீம் கொடுத்தார். அன்றைய காலகட்டங்களில் காத்திரமாக ரவூப் ஹக்கீம் போன்றவர்கள் செயற்பட்டதனால் தான் அவர்களுக்கெதிரான சதிகளை முறியடித்து பாதுகாத்ததை இவர்கள் மறந்திருக்கலாம் அல்லது நாம் இரண்டு மாதங்களுக்குள் கொடுத்த வாக்குறுதிகளையே மக்கள் மறந்து விட்டார்கள்.

தொடர்ச்சி.... 6ஆம் பக்கம்

# யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் 76ஆவது குடியரசு தின நிகழ்வு



(பு.கஜிந்தன்)

இந்தியாவின் 76வது குடியரசு தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் விசேட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) யாழ்ப்பாணம் மருதடி வீதியில் உள்ள யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தில், யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தூதுவரால் இந்திய தேசிய கொடியும் ஏற்றி வைக்கப்பட்டு தொடர்ந்து குடியரசு தின வாழ்த்து செய்தியும் அவரால் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து இந்திய தேசபக்திப் பாடல்கள், நடனங்கள் கவிதைகள் என்பன ஆற்றப்பட்டன.

இந் நிகழ்வில் இந்திய தூதரக அதிகாரிகள், ஊடகவியாளர்கள், பொலிஸார், இராணுவத்தினர் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## உயிரிழந்த அமைதிப்படையின் நினைவிடத்தில் அஞ்சலி

(பு.கஜிந்தன்)

இந்தியாவின் 76வது குடியரசு தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படையினரின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்திய உதவித் தூதுவர் சாய் முரளி யாழ் மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் Y A B M யஹம்பத் உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1987ஆம் ஆண்டு முதல் 90ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் அமைதிப்படை எனும் பெயரில் இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்தனர்.

அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது, உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் நினைவிடம் யாழ்.பலாலி இராணுவ தலைமையகம் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ளது. அங்கு சென்றே இந்திய துணைத்தூதுவர் தலைமையிலான இந்திய தூதரக அதிகாரிகள் அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.



## எம்.ஜி.இராமச்சத்திரனின் பிறந்தநாள் நிகழ்வு

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனது 108ஆவது பிறந்ததின நிகழ்வானது இன்று (27) மாலை 4.00 மணிக்கு பண்டத்தரிப்பு - சாந்தை விநாயகர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வை எம்.ஜி.ஆர் முன்னேற்றக்கழகம் சமூக சேவை அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

நிகழ்வில் புற்றுநோய், சிறுநீரக நோய், பார்வை குறைபாடு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கல், விளையாட்டில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல், சிறுவர்கள் - முதியோர்களுக்கு உதவிகள் வழங்கல் மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## “மண்” கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு



கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவையின் வெளியீடாக அமரசிங்கம் கேதீஸ்வரனின் “மண்” கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை (25) இடம்பெற்றது.

மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் குறித்த வெளியீட்டு நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரி முதல்வர் சவரி பூலோகராஜா தலைமையில் இடம்பெற்றது.

நூலின் முதல் பிரதியினை மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கிளிநொச்சி மத்திய கல்லூரி முதல்வர் சவரி பூலோகராஜா, நூலாசிரியர் அமரசிங்கம் கேதீஸ்வரன் இணைந்து வெளியிட்டு வைக்க முதல் பிரதியினை நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி சுதாகரன் பெற்றுக் கொண்டார்.

குறித்த நிகழ்வில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் சாதனை



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் உடுத்துறை இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் 170 புள்ளிகளைப் பெற்று வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

மேலும், குறித்த பாடசாலை மாணவர்கள் கோட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத மீன்பிடியை தடுத்தால் மீன்களை ஏற்றுமதி செய்யலாம்

**வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்**

(பு.கஜிந்தன்)

சட்டவிரோத மீன்பிடியை தடுத்து நிறுத்தினால் மீன்களை ஏற்றுமதி செய்யலாம் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹிந்துனெத்தியின் ஊடக அறிக்கையில் இலங்கையின் பொருளாதார சரிவில் எதிர்காலத்தில் மீன்களும் இறக்குமதி செய்கின்ற நிலைமை ஏற்படும் என தெரிவித்துள்ளார். அத்துடன் ஏற்றுமதி செய்யப்படும் மீன்களின் தரத்திலும் குறைபாடு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மீன்பிடித் துறைகளில் அதிக மீன்கள் உற்பத்தியாகும் கடற்பகுதியாக வடக்கு கடற்பகுதியே காணப்படுகிறது. அப் பகுதியில் நடைபெறும் தென்னிந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியை தடுத்து வடக்கு மீனவர்கள் சட்டப்படி சுதந்திரமாக மீன்பிடியில் ஈடுபடுவதை அரசாங்கம் உறுதி செய்யுமாக இருந்தால் உள் நாட்டிற்கு தேவையான மீன் உணவையும் ஏற்றுமதி செய்வதற்கான மீன்களையும் வடக்கு மீனவர்களால் ஏற்படுத்த முடியும் இதற்கு அநுர அரசாங்கம் தயாரா? அமைச்சர்கள் பொருளாதாரம் சரிகிறது என மக்களை அச்சுறுத்துவதை தவிர்த்து நடைமுறைச் செயற்பாடுகளில் இறங்குங்கள்.

சட்டவிரோத மீன்பிடி முறையை தென்னிந்திய மீனவர்கள் பயன்படுத்துவதால் வட கடலில் உள்ள சிறிய மீன் இனங்கள் மற்றும் மீன் உற்பத்தியாகும் சூழல் என்பன முற்றாக அழிக்கப்படுகிறது. இதனால் பெறுமதியான கடல் வளம் சூறையாடப்படுகிறது. இதனை அரசாங்கம் தடுத்து நிறுத்தும் செயற்பாட்டிற்கு இறங்க வேண்டும். இதன் மூலம் வடக்கில் மீன்பிடி துறையில் ஏற்படும் மாற்றம் நாட்டின் பொருளாதார உயர்ச்சியிலும் வலுச் சேர்க்கும் என தெரிவித்துள்ளார்.

## கடலில் காயங்களுடன் உயிருக்கு போராடியவர் வைத்தியசாலையில் அனுமதி



(பு.கஜிந்தன்)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (25) தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வத்திராயன் பகுதியை சேர்ந்த மத்தியாஸ் வின்சன் பெனடிட் என்பவரின் வலைகள் கடலில் அறுத்தெறியப்பட்ட நிலையில், இன்னொரு படகில் வந்தவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வின்சன் பெனடிட் என்பவரின் படகின் மீது மூன்று தடவைகள் மற்றுமொரு படகால் மோதி அந்த படகினை மூழ்கடிக்க முனைந்துள்ளார்கள்.

இந்நிலையில் படகில் இருந்து காயங்களுடன் தூக்கி எறியப்பட்ட வின்சன் பெனடிட் கடலில் மூழ்கி உயிருக்கு போராடிய நிலையில் அவருடன் தொழிலுக்கு சென்ற மீனவரால் காப்பாற்றப்பட்டார்.

அவர் காயங்களுடன் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகள் இடம்பெற்றுவருதுடன் மருதங்கேணி பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த நபரை பார்வையிடுவதற்காக வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவருக்கு அனுமதி அளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## கொமர்சல் வங்கியின் அறுவடை விழா



நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரி செயற்றிட்ட அறுவடை விழா கடந்த வெள்ளிக்கிழமை (24) கிளிநொச்சி மகிழங்காடு பகுதியில் இடம்பெற்றது.

கொமர்சல் வங்கியின் ஏற்பாட்டில் குறித்த நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரி செயற்றிட்டமானது யாழ் பல்கலைக்கழக விவசாய பீடம் மற்றும் விவசாய திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த செயற்றிட்டத்தின் அறுவடை நிகழ்வில் கொமர்சல் வங்கியின் பொது முகாமையாளர் டிலக்சன் கெட்டியாராட்சி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், யாழ் பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர், விவசாய திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பொறியியலாளர்கள், யாழ் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள், விவசாயிகள், வங்கி ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானதுடன், வரவேற்பு நடனமும் இடம் பெற்றது.

தொடர்ந்து அறுவடை நிகழ்வு இடம்பெற்றது. பாரம்பரிய முறையில் புதிர் எடுத்து வரப்பட்டு பொங்கலிடப்பட்டது.

நவீன விவசாய முறையில் இயந்திரங்கள் மூலம் நாற்று நாட்டப்பட்டு, ட்ரோன் மூலம் மருந்து விசிறப்பட்டு நவீன நடுகை விவசாய முறையில் குறித்த செய்கை மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வடக்கு மாகாணத்தில் பொலிஸாரின் கிளீன் ஶ்ரீலங்கா



வடக்கு மாகாண பொலிஸ் மா அதிபர் திலக் தனபால அவர்களின் வழிகாட்டலின் கீழ் பொலிஸ் உத்தியோதர்களால் கிளீன் ஶ்ரீலங்கா வேலை திட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை(26) முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் காங்கேசன் துறை சுற்றுலா துறையை சுத்தம் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

அநுர அரசினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த கிளீன் ஶ்ரீலங்கா வேலை திட்டம் நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் 04 கிராமங்களின் தரைவழி தொடர்பு முற்றாக துண்டிப்பு

## அரசியல்வாதிகளை நம்பி ஏமாந்து போன சமூகத்துக்கு விடிவு கிடைக்குமா?








கிண்ணியா கியாஸ் ஷாபி

வெள்ளம் காரணமாக கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நான்கு விவசாய கிராமங்களின் தரைவழிப்பாதை முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளதால் 240 குடும்பங்களைச் சேர்ந்த 666 பேர் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கிண்ணியா உப்பாறு கிராம சேவகப் பிரிவில் உள்ள, கண்டல்காடு, மயிலப்பன்சேனை, காரைவெட்டுவான் மற்றும் சோலை வெட்டுவான் ஆகிய விவசாய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் பிரதான போக்குவரத்து மார்க்கமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது பெய்து வருகின்ற கனமழை, இதனால் ஏற்பட்ட மகாவலி கங்கையின் பெருக்கெடுப்பு மற்றும் கந்தளாய் குளத்தின் வான் கதவுகளில் கதவுகள் திறப்பு ஆகிய நிலைமைகளினால், இந்த கிராமங்களுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கிராம மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு தேவையான அனைத்து விடயங்களும் கிண்ணியா நகரத்தை மையப்படுத்தியே இருக்கின்றது.

வைத்தியசாலை உட்பட அத்தியாவசிய பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கும் கிண்ணியா நகரத்துக்கே செல்ல வேண்டும். கிண்ணியாவுக்கு செல்வதற்கு வேறு எந்த போக்குவரத்து மார்க்கமும் இவர்களுக்கு இல்லை.

இதனால், இவர்கள் தற்போது நிரக்கதியான நிலைக்கு ஆளாகியுள்ளனர். சிறு தோணிகளை பயன்படுத்தி, ஒருவர் இருவராக, ஆண்கள் மாத்திரம் தற்சமயம் ஆற்றைக் கடந்து, பிரதான வீதிக்கு செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

ஒவ்வொரு வருடமும், சுமார் 800 மீட்டர் நீளமான வீதி இவ்வாறு வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுகின்றது. மேலும் வேகமான நீரோட்டமும் இங்கு இருக்கும். இந்த நிலையில் சிறு தோணிகள் மூலம் ஆற்றைக் கடப்பது என்பது ஆபத்தான விடயமாகவே உள்ளது.

”நீரோட்டம் அதிகமாக இருப்பதனால் இது ஒரு ஆபத்தான பயணம் என்றும், என்ன செய்வது பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டுமே! மருந்து எடுக்க வேண்டுமே. அதற்காக எப்படியும் போகத்தான வேணும்” எனக் கூறியபடியே அவர்கள் ஆற்றைக் கடக்கின்றனர்.

இந்த வீதி துண்டிக்கப்படுவது, இது முதல் தடவை அல்ல. கடந்த 40 வருடங்களாக இவ்வாறு பருவ மழை காலங்களில், இதே துன்பத்தைத்தான் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர் இந்த கிராம மக்கள்.

“அரசியல்வாதிகளை நம்பி, நம்பி ஏமாந்து போனோம். எம். பி. இல்லாத காலங்களே கிண்ணியாவுக்கு இல்லை. ஆனால் இந்த கிராமங்களுக்கு எப்போது குடியேறினோமோ

அப்போதுதிருந்தே நாங்கள்

பட்டுவருகின்ற கஷ்டங்களை யாரும் தேடுவார் இல்லை”. என இந்த கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


சுதந்திர அரசியல் வரலாற்றில், அனைத்து சந்தர்ப்பங்களிலும், நாடாளுமன்ற பிரதிநிதி ஒருவராவது கிண்ணியாவுக்கு கிடைக்கும்.

இதற்கு மேலாக, இரு நாடாளுமன்ற பிரதிநிதிகளை பெற்றுக் கொண்ட சந்தர்ப்பமும் இருக்கின்றது. இதற்கு ஒரு படி மேலே சென்று, மூன்று பிரதிநிதிகளை பெற்றுக் கொண்ட சந்தர்ப்பமும் இருக்கின்றது.

இதற்கு மேலாகவும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அதுதான் மூன்று தடவைகள் பிரதி அமைச்சர் பதவியை பெற்று, அழகு பார்த்த ஊர்தான் கிண்ணியா. அப்போதும் கூட இந்த கிராம மக்களின் பிரதான வீதியை புனரமைக்க எவரும் முன்வரவில்லை.

**கிண்ணியாவுக்கு செல்வதற்கு வேறு எவ்வித மார்க்கமும் இல்லாத நிலையில் நிர்க்கதியான சிறு தோணிகளை பயன்படுத்தி, ஆற்றைக் கடந்து, பிரதான வீதிக்கு செல்கின்றனர்..!**






எனவே, இந்த நான்கு கிராமங்களை சேர்ந்த மக்களின் வாழ்வாதார கட்டமைப்பு வசதிகளை செய்வதற்கு கிடைத்த அனைத்து சாதகமான சந்தர்ப்பங்களும் பயன்படுத்தப்படவில்லை என்பதே உண்மை.

30 வருட கால யுத்தத்தால் முழுமையாக அழிக்கப்பட்ட இந்த நான்கு கிராமங்களில் இருந்தும் மக்கள் 1990 ஆம் ஆண்டு, அகதிகளாக குடி பெயர்ந்தனர். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், 2010 ஆம் ஆண்டு இவர்கள் மீள் குடியேற்றப்பட்டனர்.

வேளாண்மை, விலங்கு வேளாண்மை, சேனைப் பயிர்ச் செய்கை, காட்டுத் தொழில், மீன்பிடி ஆகிய தொழில்களை ஜீவனோ பாயமாகக் கொண்டு வாழ்கின்ற இந்த மக்களின் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாகவே, ஒவ்வொரு வருடமும் பருவ மழை காலங்களில், இவ்வாறு துன்பத்தை அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர்.

இந்த கட்டுரை எழுதும் போது,(22 புதன்கிழமை கிழமை) கந்தளாய் குளத்தின் 10 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இந்த நிலையில், இந்தக் கிராம மக்களின் இயல்பு வாழ்க்கை மேலும் பாதிக்கப்பட கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

வெள்ளத்தால் மாத்திரம் இவர்கள் துன்பங்களை அனுபவிக்கவில்லை. காட்டு யானைகளின் தாக்குதல்களாலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இரவையும் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையுமான காலப்பகுதிக்குள், இங்கு, பாட்டி யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி ஏழு பேர் பலியாகி இருக்கின்றார்கள். இவர்கள் வயல் நிலங்களில் விவசாயத்தை மேற்கொண்டவர்களும், இந்த வீதியை கடந்து, கடட்தொழிலுக்குச் சென்றவர்களுமே இவ்வாறு பலியானவர்களாவர்.

மேலும் இதே மூன்று வருட கால பகுதிக்கு, இந்த கிராமங்களில் 12 வீடுகள் காட்டு யானையின் தாக்குதலுக்கு

உள்ளாகியிருப்பதோடு, ஏக்கர் கணக்கில் வேளாண்மை மற்றும் மேட்டுநில பயிர்களும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஏழை கிராமவாசிகள், பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடன்பட்டு, மேற்கொள்கின்ற விவசாய நிலங்களும் , குடியிருப்பு குடிசைகளும் பருவ காலங்களில் காட்டு யானைகளின் பாக்குதல்களுக்கு உள்ளாகின்றன. இதிலிருந்தும் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்?

கடந்த புதன்கிழமையிலிருந்து (22.01.2025) இந்தக் கிராம மக்களின் பயணத்துக்கான படகு சேவை ஒன்றை, கடற்படையினர் வழங்கி இருக்கின்றார்கள். இது அந்த கிராம மக்களுக்கு ஓரளவு ஆறுதலை கொடுத்திருக்கின்றது. இதற்காக

கடற்படையினருக்கு அவர்கள் நன்றி தெரிவித்துக் கொள்கின்றனர்.

எனவே, காட்டு வெள்ளம் காட்டு யானை இந்த இருமுனை தாக்குதலுக்கு மத்தியில், தங்களுடைய பாரம்பரிய காணிகளில், பாரம்பரிய தொழில்களை செய்து, திட்டத்திற்கு முன்னரும் பின்னரும் சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, இங்கு வாழ்ந்து வருகின்ற இந்த மக்களுக்கு புதிய ஆட்சியிலாவது விடிவு கிடைக்குமா?

தற்போது, சுகாதார வசதிகள், சமைத்த உணவுகள், குழந்தைகளுக்கான பால் மா என பல்வேறு தேவைகளை இவர்கள் வேண்டி நிற்கின்றார்கள். கிண்ணியா பிரதேச செயலகம் இவற்றை உடனடியாக கருத்தில் கொண்டு, அவசர உதவிகளை கொடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

# ரவூப் ஹக்கீம் மீது அரசுக்கு ஏன் இந்த கோபம்...

( 4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவைகளையா நினைவு வைத்திருக்கப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் பேசியிருப்பார்கள். முஸ்லிம்கள் அதிகளவாக எங்களுக்குத்தான் வாக்களித்தார்கள். எங்கள் கட்சித்தான் முஸ்லிம் கட்சி என்று சொன்ன சபை முதல்வர், முஸ்லிம்கள் விடயத்தில் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கிறீர்கள்? என உங்களுக்கு வாக்களித்த பெரும்பாலான முஸ்லிம்களை குறுகிய காலத்தில் உணரச்செய்தவர்களும் அவர்கள் தான் என்பதும் அவர்களது சாதனை தான்.

சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னாயக்க கடந்த காலங்களில் நாடாளுமன்றத்திலிருந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் ஆடை விடயத்தில் வெளியிட்ட கருத்துக்களை மறக்கவில்லை. முஸ்லிம்களின் திருமண வயது விவகாரம் மீண்டும் இந்த அரசாங்கத்திலும் ஆரம்பிக்கப்படுகிறது. முஸ்லிம்கள் தங்களுக்கு என்று எதையாவது கேட்கும் போது இலங்கையர்களாகப் பார்க்க வேண்டும். இன ரீதியாகப் பார்க்கக்கூடாதெனக் கூறிக்கொண்டு செயலில் இந்த அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறதென்பதை அறியாத முட்டாள்களாக முஸ்லிம் சமூகமில்லை என்பதை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியாக மக்கள் மத்தியில் செல்வதற்குப் பயந்து தேசிய மக்கள் சக்தியாக வந்தவர்கள், அநுர அலையில் பலரும் அள்ளுண்டு போன போது, தேர்தலில் போட்டியிடாது தேசியப்பட்டியலில் நாடாளுமன்றம் பிரவேசித்த சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்னாயக்க அறிவாரோ....? முதல் முதலாக கண்டி மாவட்டத்தில் மரச்சின்னத்தில் தேர்தல் கேட்டு ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றம் சென்றாரா..? எனக் கேட்கத் தோன்றுகிறது.

நாடாளுமன்றத்தில் இவ்வாறு பேசி ரவூப் ஹக்கீமை மடக்கலாம் என அரச தரப்பு கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்ட போது, ரவூப் ஹக்கீம் தான் என்ன நோக்கத்திற்காக குறித்த பிரேரணையைக் கொண்டு வந்தாரோ அந்தத்தீர்மானத்தை அதாவது ரோஹிங்கிய அகதிகளைத் திரும்ப மியன்மாருக்கு அனுப்புவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடாக அரச தரப்பு சபைக்கு அறிவித்ததிலிருந்து ரவூப் ஹக்கீம் சாணக்கியமாக தனது பிரேரணையை வெற்றி கொண்டதைக்காண முடிந்தது.

முஸ்லிம்கள் அதிகளவாக தங்களுக்கு வாக்களித்து அதிக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட முஸ்லிம் கட்சி எனச் சொல்லி கொள்ளும் அரசாங்கம், கடந்த ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களுக்கெதிராக நடந்த ஜனாஸா எரிப்பு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், அட்டுலுகம, அக்குறணை போன்ற பிரதேசங்கள் கொரோனா காலத்தில் முடக்கி பாதிப்புகளை ஏற்படுத்திய விடயங்கள் எனப்பல அநீதியான விடயங்களில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்கு நீதியைப்பெற்றுக் கொடுக்கப்போகிறார்களா? எனப்பார்க்க வேண்டும்.

அதே போன்று, நாடாளுமன்றத்தில் வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் மனிதாபிமானத்தோடு ரோஹிங்கிய அகதிகள் விடயத்தில் நடந்து கொள்கிறார்களா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

# ஹம்பாந்தோட்டை இந்திய துணை தூதரகத்தில் 76ஆவது இந்தியா குடியரசு தினக் கொண்டாட்டம்





(ஹம்பாந்தோட்டை நிருபர்)

ஹம்பாந்தோட்டை இந்திய துணை தூ துரகத்தினால் நேற்று இந்திய நாட்டின் 76 வது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது.

ஹம்பாந்தோட்டை இந்திய துணை தூதுரகத்தின் தூதுவர் ஹர்விந்தர் சிங் தலைமையில் தூதரக அதிகாரிகளினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தூதுவரினால் இந்திய தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதன் பின்பு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்திய ஜனாதிபதியின் தேசிய குடியரசு தின செய்தி தூதுவரினால் வாசிக்கப்பட்டதோடு கடந்த வருடத்தில் ஹம்பாந்தோட்டை இந்திய துணை தூதுரகத்தினால் கல்வி அபிவிருத்தி, சுற்றுலா, கலாசாரம், சுயதொழில், சமூக மேம்பாடு, நட்புறவு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் வருகை தந்திருந்தோருக்கு காண்பிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், முப்படைகளின் பிரதேச உயர் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், அரசபங்க நிறுவனங்களின் தலைவர்கள், வியாபாரிகள் மற்றும் நலன் விரும்பிகளும் கலந்து சிறப்பித்தனர். ஹம்பாந்தோட்டை இந்திய துணை தூதரகத்தினால் இந்திய நாடு தொடர்பான இலங்கை நாட்டின் பார்வை எனும் தொனிப் பொருளிலான புகைப்படக் கண்காட்சி சுசாகலை ரஜமகா விகாரையில் நடைபெற்றது.

ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான நிஹால் கலப்பத்தி, அதுல வெலதகொட மற்றும் இந்திய துணை தூதரகத்தின் ஹம்பாந்தோட்டை தூதுவர் ஹர்விந்தர் சிங் ஆகியோர் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிடுவதனைக் காணலாம்.

# காலம் தாழ்த்தாது உடனடியாக வேலைவாய்ப்புகளை வழங்குங்கள்

## வடக்கு, கிழக்கு பட்டதாரிகள் ஒன்றியம் கோரிக்கை



தேர்தல் காலத்தின் போது அநுரகுமார திசாநாயக்க வாக் குறுதிகளை அள்ளி வழங்கி யதைப் போன்று, காலம் தாழ்த் தாது உடனடியான தீர்வாக வேலை வாய்ப்புகளை வழங்குமாறு வடகிழக்கு பட்டதாரிகள் ஒன்றியத் தின் உறுப்பினர் எம்.ஐ.எம்.புர்கான் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், “அரசாங்கத்தின் அசமந்த போக்கு காரணமாக வேலையற்ற பட்டதாரி கள் பல துன்பங்களை அனுபவித்து வாழ்ந்து வருகிறார்கள்.


பொருளாதார ரீதியாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின் றனர். மேலும், ஈஸ்டர் தாக்குதல், டெங்குநோய், கொரோனா நோய் போன்ற பல சவால்களுக்கு முகங் கொடுத்து, உள்வாரி, வெளிவாரி பட்டங்களை சுமார் 4, 5 வருட கற்கைகளை சிறப்பு, பொது பட்டம் என கற்று பூரணமாக்கியதன் பின் பும் தீர்வில்லாமல் தவிக்கிறோம்.

எங்களைப் போன்ற இளைஞர், யுவதிகளின் குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் வாக்குகளை வைத்து ஆட்சியை பிடித்த அரசாங் கம் எதிர்வரும் வரவு செலவு திட்டம் ஊடாக தீர்வை வழங்க வேண்டும்.

ஆசிரியர்களுக்காக 30 ஆயிரம் வெற்றிடங்கள் கிராம சேவகர்க ளுக்காக 3000 க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாகவும் கூறு கின்றனர். இதை பட்டதாரிகளுக்கு பரீட்சை இன்றி பொது நியமனங்கள் ஊடாக அரச துறையில் நியமனங் களை வழங்க வேண்டும்.

தற்போது கற்கும் உயர்தரம் தொடக்கம் பல்கலைக்கழக மாண வர்களின் எதிர்காலம் கேள்விக்குறி யாக்கப்படுகிறது. 2021ஆம் ஆண்டு முதல் உள்வாரி வெளிவாரி பட்டங்களுடன் பலர் பட்டதாரிகளாக தொழில் இன்றி அலைகின்றனர். இதனை கருத்தில் கொண்டு புதிய அரசாங்கத்தின் கீழ் பொதுவான நியமனங்களை எங்களுக்கு வழங்க ஆளுநர்கள், துறைசார் அமைச்சர்கள் புதிய ஜனாதிபதி போன்றோர்கள் மிக கரிசனையுடன் செயற்படுங்கள்” என மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புதையலுடன் சந்தேக நபர் கைது



(எம்.ரீ.ஆரிப்)

கிரானேகம உஸ்பத்துயாய பகுதியில் புதையலுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 48 வயதுடைய ஹல்மில்லேவ ஆண்டியாகல பகுதியைச் சேர்ந்தவராவர்.

தங்க நிற புத்தர் சிலை 24 இதழ்கள் கொண்ட தங்க தாமரை பூ உள்ளிட்ட பல்வேறு பொருட் களை பொலிஸார் கைப்பற்றியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# அரிசியை பதுக்கி வைப்போரை அடையாளம் கண்டு அறியத்தரவும்

## அம்பாறை மாவட்ட அரச அதிபர் வேண்டுகோள்

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் அரி சியை பதுக்கி வைத்து, சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு நிலவு வதாக தெரிவித்து கூடுதலான விலைக்கு அரிசியினை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் அறியத்தருமாறு பொதுமக்களிடம் அம்பாறை மாவட்ட அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் அரசாங் கத்தினால் நிர்ணயிக்கப்பட் டுள்ள அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசியை விற் பனை செய்யும் வர்த்தகர்களுக் கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக, பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி விற்பனை நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்புகள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப் பட்டு வருவதாகவும் மேற்படி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி வர்த்தக நிலையங்கள் மீது அடிக்கடி பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன் எச்சரிக்கை யுடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசியை கூடுதலான விலைக்கு விற்பனை செய்த களஞ்சியசாலைகள் மற்றும் வர்த் தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றத்தினூடாக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் அரச அதிபர் தெரி விக்கிறார்.

அரிசி விற்பனை நிலையங் கள் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டதுடன் விலைப்பட்டியல் காட்சிப் படுத்த தவறிய வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும் அதிகாரிகளால் விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அம்பாறை மாவட்டத்தில் அரிசிக் கான தட்டுப்பாடு உக்கிரமாக இருப்புடன் கடைகளில் அரிசி இல்லை என்ற பதாகையே தொங்க விடப்பட்டுள்ளது.

இதேவேளை அரிசி தட்டுப்பாடு, விலையேற்றம், தேங்காய் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு என்பன காரணமாக உணவுப் பார்சல்களின் விலையும் அதிகரித்துள்ளது.

# 146வது வருட புனித ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் பாராயணம்

(பீ.எம் முக்தார்)

பேருவளை மாளிகாஹேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புஹாரித் தக்கியாவில் 146வது வருட புனித ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் பாராயண மஜ்லிஸின் தமாம் வைபவம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

காதிரிய்யத்துன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் அல் ஆலிமுல் பாழில் வஷ்ஷெய்ஹ் காமில் அஹ்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரிய்யதுன் நபவி தலைமையில் இப் புனித மஜ்லிஸ் நடைபெறவுள்ளது.

வெள்ளிக்கிழமை தவிர தொடர்ந்து ஒரு மாத காலம் புனித ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் பாராயணம் செய்யப்படுவதோடு, விளக்கவுரையும் இடம்பெறு கிறது.

புஹாரிக் கந்தூரி மஜ்லிஸை முன்னிட்டு இலங்கை ரயில்வே திணைக்களம் 146ஆவது வருடமாகவும் இம்மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் கொழும்பு – அளுத்கம, காலி – அளுத்கம இடையே விஷேட ரயில் சேவைகளை நடாத்தவுள்ளது.

அத்தோடு, கரையோர ரயில் சேவையில் ஈடுபடும் சகல கடுகதி ரயில் வண்டிகளும் இம்மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் பேருவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும். மேலும் அளுத்கம – களுத்துறை இடையே விஷேட பஸ் சேவைகளும் இடம்பெறவுள்ளன. கந்தூரி மஜ்லிஸில் நாட்டின் நாலா பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பங்குபற்றுவர். பேருவளை பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வர்.

## புலமைப் பரிசில் பரீட்சை:

# கல்முனை கோட்டத்தில் அல்-அஷ்ஹர் முதலிடம்

(ஜெஸ்மி எம்.மூஸா)

வெளியாகியுள்ள ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் பிரகாரம் கல்முனை கோட்டப் பாடசாலைகளில் கல்முனை அல்-அஷ்ஹர் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கல்முனை கோட்டத்திலுள்ள 15 பாட சாலைகளில் 48 மாணவர்களை வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தியடைந்துள்ளனர்.

139 வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ள மேற்படி மாணவர்களுள் முகம்மட் சுக்ரி முகம்மட் ஹாதிம் என்ற மாணவன் 179 புள்ளிகளைப்பெற்றுள்ளார்.

கடந்த வருடம் இடம்பெற்ற பெறுபேறு களிலும் மேற்படி பாடசாலையே முதன்மை வகித்தது. அதிபர் ஏ.எச்.அலி அக்பரினதும் ஆசிரியர்களின் விடாமுயற்சியும் பெற்றோர் மற்றும் மாணவர்களின் முயற்சியுமே வெற் றியின் காரணமாகும்.

# அசறிக்கம முஸ்லிம் வித்தியாலயத்தில் வரலாற்றில் முதன் முறையாக சித்தி



(எம்.ரீ.ஆரிப் )

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட அசறிக்கம முஸ்லிம் வித்தியாலய வரலாற்றில் முதன் முறையாக றாசிக் என். ஹபீர் றிதா என்ற மாணவி சித்தியடைந்துள்ளார்.

அசறிக்கம முஸ்லிம் வித்தியாலய வரலாற்றில் 45 வருடங்களுக்கு பின்னர் றாசிக் என் ஹபீர் றிதா என்ற மாணவி 144 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ள இம்மாணவிக்கு அதிபர் ஏ.எம் .நியாஸ் உட்பட வகுப்பாசிரியர் எம்.ஏ.றியாஸ் முகமட் மேலதிக வழிகாட்டல் ஆசிரியர் ஏ.எம். நியாஸ் உள்ளிட்ட ஆசிரியர் குழாம் மற்றும் அசறிக்கம மக்களும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# வாழைச்சேனை வை.அஹமட் வித்தியால மாணவி 146புள்ளிகள் பெற்று சித்தி



2024ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்துக்கான புலமை பரீட்சையில் வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலத்தை சேர்ந்த மாணவி ஜே.எப்.இஸட். ஷம்ரத் 146 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் ஹனீபா ஜெபர் மற்றும் இஸ்ஸதீன் பாத்திமா ஷியானா ஆகியோரின் புதல்வியும் ஆவார்.

# தொடர் மழை; டெங்கு நோய்க்கு அதிக வாய்ப்பு

## சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறூக்






(றியாஸ் ஆதம்)

கிழக்கில் கடந்த சில தினங்கள் பெய்த தொடர்ச்சியான மழை மற்றும் அதனையடுத்து ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் பின்னரான காலப்பகுதியில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால், டெங்கு நோய் மிக வேகமாக பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாக பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் உவைஸ் பாறூக் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்கள் நீரில் மூழ்கி வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. இதன் பின்னரான காலப்பகுதியில் டெங்கு நுளம்பின் பெருக்கமும் அதிகரித்து டெங்கு நோய் மிக வேகமாக பரவக்கூடிய ஆபத்தான நிலைமைகள் காணப்படுகின்றன.

இதனையடுத்து பொத்துவில் பிரதேசத்தில் டெங்குவினை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கி, தங்களது வீடு உள்ளிட்ட சுற்றுச்சூழலில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்களை அழித்து சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகாதவாறு தங்களது வீடு உள்ளிட்ட சுற்றுப்புறச் சூழலை துப்புரவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்வதன் ஊடாகவே டெங்குவினை கட்டுப்படுத்த முடியும். அத்துடன் பொத்துவில் பிரதேசத்தில் உள்ள அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிலும் அதன் சுற்றுச்சூழலை துப்புரவு செய்து தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறும் குறித்த நிறுவனத் தலைவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

விசேடமாக பொதுமக்கள், பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து பொது இடங்களில் சிரமதானப் பணிகளை முன்னெடுத்து கொடிய டெங்கு நோயினை கட்டுப்படுத்துவதற்கு முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் :

# கிழக்கில் மட்டு., அம்பாறை வலயங்கள் முதலாம் இடம்

(முகம்மட் முக்தார்)

தற்போது வெளியிடப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளுக்கமைய கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் மட்டக்களப்பு வலயமும் சிங்கள மொழி மூலம் அம்பாறை வலயமும் முன்னிலை பெற்றுள்ளதாக மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.ஆர்.ஹஸந்தி "ஒருவனுக்கு" தெரிவித்தார்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தமிழ்மொழி மூலம் 1,2,3 ஆம் இடங்களை முறையே மட்டக்களப்பு, திருக்கோவில், கல்முனை ஆகிய வலயங்கள் பெற்றுள்ளன.

சிங்கள மொழி மூலமான முடிவுகளிற்கமைய 1,2,3 ஆம் இடங்களை அம்பாறை, தெஹியத்தகண்டிய, கந்தளாய் ஆகிய கல்வி வலயங்கள் பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மேற்படி பரீட்சைக்கு 29096 மாணவர்கள் தோற்றி 23734 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 3911 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலை கிருஷ்ண பகவான் ஆலய மகா கும்பாபிஷேகம்




( எஸ்.கீதபொன்கலன் )

திருகோணமலை மடத்தடி ஸ்ரீ ருக்மினி தாயார்,ஸ்ரீ சத்தியபாமா தாயார் சமேத ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கள்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்னர் உற்சவமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு தற்போது நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

கும்பாபிஷேக கிரியாராம்பம் இன்று (27) திங்கள் நடைபெறும். தொடர்ந்து எதிர்வரும் 1 ஆம் 2 ஆம் திகதிகளில் எண்ணெய் காப்பு சாத்துதல் நடைபெறு உள்ளது.திருகோணமலையில் 60 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட முதலாவது கிருஷ்ணர் ஆலயம் இதுவாகும்.

# தமிழர் பாரம்பரிய பண்பாட்டை பிரதிபலிக்கும் பொங்கல் விழா







(வெல்லாவெளி நிருபர்)

தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய கலாசார அம்சங்களை மங்கி மறையாமல் பிரதிபலிக்கும் பொங்கல் விழா மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை(26) குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தில் நடைபெற்றது.

செட்டிபாளையம் கட்டுப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து சம்பிரதாய முறைப்படி கதிர் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது. பின்னர் நெற்கதிர்கள், செட்டிபாளையம் ஊடாக பண்பாட்டுப் பவனி ஊர்வலமாக செல்லப்பட்டு குருக்கள்மடம் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தைச் சென்றடைந்தது. அங்கு கொண்டு சென்ற நெற்கதிர்கள் அடிக்கப்பட்டு புத்தரிசி குற்றி புதுப்பானையில் இட்டு பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன.

குருக்கள்மடம் கிராம பொதுமக்கள், மற்றும், பொது அமைப்புக்களுடன் இணைந்து மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தமிழ் தாய் வாழ்த்து, இசைவாத்திய ஆற்றுகை, கிரமியநடனம், நாட்டார் நடனம், உழவர் நடனம், ஒயிலாட்டம், நாட்டார் பாடல், கவியரங்கம், என்பன ஆற்றுகை செய்யப்பட்டதோடு, கிராமிய விளையாட்டுக்களும் இடம்பெற்று நிகழ்ச்சிகளில் பற்கேற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.

# புலமைப் பரிசில்: அட்டாளைச்சேனை அல் முனீராவில் 17 மாணவர் சித்தி



(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் அட்டாளைச்சேனை கோட்டக்கல்விக்குட்பட்ட அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையில் 17 மாணவர்கள் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து கோட்டத்தில் முதலாமிடத்தை பெற்றுள்ளனர்.

அட்டாளைச்சேனை கல்வி கோட்டத்தில் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்த பாடசாலை அல் முனீரா பெண்கள் உயர் பாடசாலையாகும். சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலையின் அதிபர் எம்.ரீ.எம்.சியாத், ஆரம்ப பிரிவு வலயத் தலைவர் எம்.ஐ.ஜௌபர், பிரதியதிபர்களான எம்.ஏ. சுஹைறா, ஏ.கே.அனீஸ், உதவியதிபர் ஏ.ஜீ.எம்.றினீஸ், மற்றும் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான எம்.வை.சம்ஹுடீன், ஏ.ஆர். றிம்ஸான் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# கணினிப் பயிற்சி நெறி நிறைவு; சான்றிதழ்கள் வழங்கி வைப்பு



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் Smart Sri Lanka தொழில் வழிகாட்டல் நிலையத்தினால் வழங்கப்பட்டு வரும் இலவச கணினிப் பயிற்சி நெறியை நிறைவுசெய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை Computer Application Assistant Course கணினி இலவச பயிற்சி நெறியை நிறைவு செய்துள்ளவர்கள் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகாவிடமிருந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர்.

இக்கற்கைநெறியின் இணைப்பாளராகவும் வளவாளராகவும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.எம். பாஸில், தொழில் வழிகாட்டல் தலைமைத்துவ பயிற்சியாளராக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. கருணாகரன் ஆகியோர் பணியாற்றினர்.

# அலி றஜாய்க்கு 'சுவதம் விருது'



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நாடகத்துறைக்காக சாய்ந்தமருதைச் சேர்ந்த கலைஞர் எம்.எச்.எம். அலி றஜாய் 'சுவதம் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் உள்ள கலைஞர்களைத் தெரிவு செய்து, அவர்களைக் கௌரவிக்கும் முகமாக வீட்டுக்கு வீடு சென்று கலைஞர் சுவதம் விருது வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் (24) நடைபெற்றது.

நாடகக் கலைஞராக இருந்து பிரதேத்தில் எடுக்கப்பட்ட பல நாடகங்களில் நடித்து, தனது திறமையைக் காட்டி வரும் இவர், இவ்வருடம் நடைபெற்ற கலைஞர்களுக்கான சுவதம் தெரிவின் போது கௌரவிக்கப்பட்டார்.

சாய்ந்தமருது அல்கமரூன் வித்தியாலயம், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை ஆகியவற்றில் தமது ஆரம்ப மற்றும் உயர்கல்வியைக் கற்ற இவர், கணினியிலும் பாண்டித்தியம் பெற்றுள்ளார்.

மருதம் கலைக்கூடல் மன்றத்தில் பிரதித் தலைவராக 11 ஆண்டுகள் கடமை புரிந்து, பல விருதுகளும் பெற்று, கொழும்பு தமிழ் சங்கத்தினாலும் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்றது.

இதில், அதிதிகளாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றிம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ். நளீர், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். எம். தௌபீக், சாய்ந்தமருது பிரிவு-01 இன் கிராம அதிகாரி எஸ்.எம். இல்பான், சமூர்த்தி உத்தியோகத்தர் ஏ.எம்.காலித்தீன், பிரதேச கலாசார அதிகார சபையின் பொருளாளர் அஸ்வான் சக்காப் மௌலானா, கலைஞர் என்.எம். அலிக்கான், ஊடகவியலாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம். ஸாகிர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கண்டி தர்மராஜா வித்தியாலயத்தில்
# தடையை மீறி Variety show;
## விசாரணைகள் ஆரம்பம்

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி தர்மராஜா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவின் (Variety show) இடைநிறுத்துமாறு மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ள போதிலும், அதனையும் மீறி நிகழ்ச்சி நடத்தப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை மீறி, கண்டி தர்மராஜா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவினால் பெற்றோரிடம் பணம் வசூலித்து (Variety show ) என்ற நிகழ்ச்சியை நடத்தப்படவுள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நிகழ்ச்சியைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான கடிதத்தை மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நிஹால் அழகக்கோன் வழங்கியிருந்த போதிலும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கமல் ஆரியசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் கண்டி தர்மராஜா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்க பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களைத் தவிரப் பெற்றோரிடமிருந்து பணம் பெறக்கூடாது என கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளமை தெரிந்ததே.

கடந்த 22ஆம் திகதி கண்டி தர்மராஜா கல்லூரியின் ஆரம்பப் பிரிவினால் பணம் வசூலித்து நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த பல்வேறு நிகழ்ச்சியைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் அதிபருக்கு உத்தியோகப் பூர்வமாக எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

நிகழ்ச்சிகளைத் தற்காலிகமாக நிறுத்தும் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, பணம் வசூலிக்காமல் நிகழ்ச்சியை நடத்தப்போவதாகப் பெற்றோர்கள் குழு தெரிவித்து, கடந்த 23ஆம் திகதி மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குச் சென்று மாகாணக் கல்விப் பணிப்பாளரை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியதுடன் நிகழ்ச்சிகளை நடத்த அனுமதியும் கோரியுள்ளனர்.

அதற்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அனுமதி வழங்காததால், ஏலவே தீர்மானிதுள்ளமைக்கமைவாக குறித்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன .இது தொடர்பான விசாரணையில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நிஹால் அழககோன் தனது அனுமதியின்றி நிகழ்ச்சி நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண கல்விச் செயலாளர் மதுபானி பியசேனவும் இதனை உறுதிப்படுத்தியதுடன், கல்வி அமைச்சினால் விசாரணை நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் தர்மராஜா கல்லூரியின் அதிபர் மகேஷ் கருணாரத்னவிடம் வினவியபோது, குறித்த நிகழ்ச்சிகளை நடத்துவதற்குப் பாடசாலை எவ்வித பணமும் அறவிடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை; ஹற்றன் கல்வி வலயத்தில் 128 மாணவர் சித்தி

2024ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் படி ஹற்றன் கல்வி வலயத்தில் 27 பாடசாலைகளில் 128 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

இதன்படி,

மஸ்கெலியா சென் ஜோசப் கல்லூரி கீழ் பிரிவில் 38 மாணவர்கள்

சாமிமலை பெரர்லோன் தமிழ் வித்தியாலயத்தில் 09 மாணவர்கள

மறே கீழ் பிரிவில் உள்ள தமிழ் வித்தியாலயத்தில் 08 மாணவர்கள்

புளும்பீல்ட் தேசிய கல்லூரியில் 08 மாணவர்கள்

ஹப்புகஸ்தனை தமிழ் வித்தியாலயத்தில் 06 மாணவர்கள்

சாமிமலை கிங்கோரா தமிழ் வித்தியாலயத்தில் 06 மாணவர்கள்

சாமிமலை எனன்டல் தமிழ் வித்தியாலயத்தில் 05 மாணவர்கள்

டீசைட் தமிழ் வித்தியாலயத்தில் 05 மாணவர்கள்

தெய்வகந்தை தமிழ் வித்தியாலயத்தில் 04 மாணவர்கள்

லக்சபான இலக்கம் 1 தமிழ் வித்தியாலயத்தில் 04 மாணவர்கள்

எடமஸ்பீக் தமிழ் வித்தியாலயத்தில் 04 மாணவர்கள்

மஸ்கெலியா முஸ்லிம் வித்தியாலயத்தில் 04 மாணவர்கள்

சாமிமலை மின்னா தமிழ் வித்தியாலயத்தில் 03 மாணவர்கள்

கங்கேவத்தை தமிழ் வித்தியாலயத்தில் 03 மாணவர்கள்

மொக்கா தமிழ் மகா வித்தியாலயத்தில் 02 மாணவர்கள்

மல்லியப்பூ தமிழ் வித்தியாலயத்தில் 02 மாணவர்கள்

மிட்லோதியன் தமிழ் வித்தியாலயத்தில் 02 மாணவர்கள்

சாமிமலை ஓல்ட்டன் தமிழ் வித்தியாலயத்தில் 02 மாணவர்கள்

நோட்டன் கணபதி வித்தியாலயத்தில் 02 மாணவர்கள்

குயின்ஸ்லேன்ட் தமிழ் வித்தியாலயத்தில் 01 மாணவர்கள்

காட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் 01 மாணவர்கள்

திருவள்ளூர் தமிழ் வித்தியாலயத்தில் 01 மாணவர்கள்

நல்லதண்ணி தமிழ் வித்தியாலயத்தில் 01 மாணவர்கள்

மோட்டிங்கேம் தமிழ் வித்தியாலயத்தில் 01 மாணவர்கள்

வட்டவளை லொனாக் தமிழ் வித்தியாலயத்தில் 01 மாணவர்கள்

லக்கம் தமிழ் வித்தியாலயம் கிழ் பிரிவில் 01 மாணவர் அடங்கலாக மொத்தம் 128 மாணவர்கள் வெட்டு புள்ளிக்கு மேல் புள்ளிகள் எடுத்து சித்தி பெற்றுள்ளனர்.

## கண்டியில் இந்திய குடியரசு தின நிகழ்வு








(க.கிஷாந்தன்,டி.வி.குமார், எம்.ஏ.அமீனுல்லா)

இந்தியாவின் 76வது குடியரசு தின நிகழ்வு கண்டி உதவி இந்தியத் தூதுவர் வீ.எஸ்.சரண்யா தலைமையில் கண்டியிலுள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று (26) நடைபெற்றது. 76வது குடியரசு தினத்தை எடுத்துக்காட்டும் வகையில் இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் கட்டடம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேலும், இந்நிகழ்வுக்கு மலையகத்தில் வாழும் இந்தியக் குடும்பங்கள் உட்பட அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களின் பிரதிநிதிகள் மற்றும் அனுநாயக்கத் தேரர்கள், இந்து, இஸ்லாமியச் சமய பெரியோர்கள், அரசியல் பிரமுகர்கள், கண்டி தமிழ் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர்.

இதன்போது இந்தியத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு இந்தியாவின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதன் பின்னர், இந்தியக் குடியரசுத் தலைவரின் ஆசிச் செய்தியை உதவித் தூதுவர் வீ.எஸ். சரண்யா வாசித்தமை குறிப்பிடத்தக்கது.

## நோர்வூட்டில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, பொட்ரி தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சுற்றுச்சூழலை அழித்து சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரில் இருவர் பொகவந்தலாவ பகுதியைச் சேர்ந்தவர் என்றும் மற்றைய இருவர் பொட்ரி தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் பஸ் சேவையின்றி பயணிகள் அவதி

நுவரெலியா -தலவாக்கலை பிரதான வீதியில் காலை வேளை உரிய நேரத்துக்கு பஸ்கள் சேவையில் ஈடுபடாமையினால் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களும் தொழிலுக்கு செல்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதோடு மேலும் பாடசாலை மாணவர்கள் மிதிபலகையில் தொங்கியபடி பயணம் செய்வது அபாயமானதென தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதியில் தினமும் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்களில் தொழில் புரியும் சாரதியோ அல்லது நடத்துனரோ விடுமுறை என்றால் சேவையில் ஈடுபடும் பஸ்ஸும் முற்றாக நிறுத்தப்படுவதாகவும், பஸ் ஏதேனும் பழுது ஏற்படும் சமயத்திலும் பஸ்கள் நிறுத்தபடுவதாகவும் தெரிவிக்கின்றனர். இதனால் அவற்றில் தினமும் பயணிக்கும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், அன்றாட தொழிலுக்குச் செல்வோர் சீரான பஸ் போக்குவரத்து இன்மையால் அசௌகரியத்து உள்ளாகின்றனர்.

குறிப்பாக கிலாரண்டன், டெஸ்போட், கிரிமிட்டி, வாழைமலை, அவோக்கா, கார்லிபேக் போன்ற பிரதேசங்களை சேர்ந்தவர்களே போக்குவரத்து பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இந்த பஸ்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளமையால், காலை 6.30 மணிக்கு தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கி புறப்பட்டு, காலை 7.20 மணியளவில் டெஸ்போட், கிரிமிட்டி வழியாக செல்லும் பஸ்ஸில் கூட்டம் நிரம்பிக் காணப்படுவதாகவும், அதில் ஏறி பயணம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். இதில் கிலாரண்டன் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் நானுஓயா பிரதான நகருக்கும், நானுஓயா நாவலர் பாடசாலைக்கும் மூன்று நான்கு கிலோமீற்றர் தூரம் நடந்தே செல்கின்றனர். இதனால் உரிய நேரத்தில் பாடசாலைக்கோ அலுவலகங்களுக்கோ செல்ல முடியாமல் போகிறது. இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கு தெரியப்படுத்தியும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே காணப்படுகிறது.

எனவே, இப்பிரதேச மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு பாடசாலை நேரங்களில் சீரான பஸ் சேவையை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தின் வருடாந்தத் தைப்பூச தேர்த்திரு விழாவையொட்டி ஆலய பரிபாலன சபைத் தலைவர் தர்மராஜ் தலைமையில் தலவாக்கலை லிந்துலை நகரசபை செயலாளருடன் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதன்போது தேர் தேர்த்திரு விழாவின்போது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு தலவாக்கலை லிந்துலை நகர சபையின் செயலாளரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

(படம் : தலவாக்கலை பி.கேதீஸ்)

## முகாமையாளரால் தோட்ட கள உத்தியோகத்தர் இருவர் மீது தாக்குதல்



பத்தனை மவுண்வேணன் தோட்டத்தை சேர்ந்த இரண்டு உதவி தோட்ட கள உத்தியோகத்தர்களை தோட்ட முகாமையாளர் தாக்கிய சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்குள்ளான இரண்டு தோட்ட கள உத்தியோகத்தர்களில் ஒருவர் கொட்டகலை வைத்தியசாலையிலும் மற்றுமொருவர் கிளங்கன் வைத்தியசாலையிலும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

தோட்ட நிர்வாகத்துக்குள் இடம்பெற்ற உள்ளக சம்பவமே குறித்த தாக்குதலுக்கு காரணமென்று தெரிவிக்கப்படுகின்ற அதேநேரம் முகாமையாளரின் தாக்குதலுக்கு உதவி முகாமையாளரும் உதவி புரிந்ததாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

## டிக்டொக் காதலியைத் தேடி வந்த இளைஞன் கைது

அக்கரபத்தனை பகுதியிலுள்ள பாடசாலை மாணவியான, டிக்டொக் காதலியின் வீட்டுக்கு சென்ற திருகோணமலை பகுதியைச் சேர்ந்த இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலை மாணவி தந்தையை இழந்தவர் எனவும், அவரின் தாயார் வெளிநாட்டில் வேலை செய்வதாகவும், சித்தப்பாவின் பராமரிப்பிலேயே இருந்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவியின் வீட்டுக்கு வந்த குறித்த இளைஞனின் நடத்தை தொடர்பில் பிரதேச மக்களுக்கு சந்தேகம் ஏற்பட அது தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், இளைஞரிடம் விசாரித்துள்ளனர். அவரிடம் அடையாள அட்டை இருக்கவில்லை. தகவல் வழங்கலிலும் தடுமாற்றம் இருந்துள்ளது. அவரது நடத்தையில் சந்தேகம் ஏற்பட அவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மாவனல்லை நகரம் 17 சீசீடிவி மூலம் கண்காணிப்பு



(அமீர் ஹுசைன்)

மாவனல்லை நகரம் 17 சீசீடிவி கெமராக்கள் மூலம் கண்காணிப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ். எம்.ஐ. செனவிரத்ன மூலம் இந்த கண்காணிப்பு செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.


இத்திட்டத்திற்கான பூரண உதவிகள் லயன்ஸ் கழக மாவனல்லை பிரிவு மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன், 17 பாதுகாப்பு கெமராக்கள் மூலம் 24 மணித்தியாலங்களும் மாவனல்லை நகரை கண்காணிப்பதற்கான பணிகள் ஆரம்பமாகியுள்ளன. மாவனல்லை நகரத்தின் பாதுகாப்பு மற்றும் குற்றச் செயல்களை தடுத்தல் என்பனவே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாவனல்லை பொலிஸ் பொறுப்பதிகாரி லசந்த கலுஆரச்சி இந்த கெமரா தொகுதியை அமைத்துக் கொடுத்த லயன்ஸ் கழகத்திற்கு நன்றியை தெரிவித்தார்.

# 76வது குடியரசு தினம்;
# தேசிய கொடி ஏற்றினார் திரௌபதி முர்மு
# நாட்டு மக்களுக்கு பிரதமர் வாழ்த்து









டில்லி கடமை பாதையில் தேசியக் கொடி ஏற்றி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு மரியாதை செலுத்தினார். அத்துடன் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக இந்தோனேசிய ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோ பங்கேற்றார். மேலும் குடியரசு தின விழாவில் இந்தியப் பிரதமர் மோடி, ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகளின் தளபதிகள் பங்கேற்றுள்ளனர்.

76வது குடியரசு தினத்தை முன்னிட்டு குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் தனது வாழ்த்துச் செய்தியில், 76வது குடியரசு தினத்தில் நாட்டுமக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். நமது சுதந்திர நூற்றாண்டின் இறுதி காலாண்டில் நுழையும் வேளையில், 2047 ஆம் ஆண்டில் வளர்ந்த இந்தியாவை நனவாக்க உறுதியுடன் உழைப்போம். முதலில் தேசம் என்ற நமது அசைக்க முடியாத உறுதிப்பாட்டில் நங்கூரமிடுவோம் என்றார்.

இதேவேளை அங்கு உரையாற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துச் செய்தியில், “குடியரசு தின நல்வாழ்த்துகள். இன்று, நமது குடியரசின் 75 ஆண்டுகளைக் கொண்டாடுகிறோம். தொலைநோக்கு பார்வையுடன் நமது அரசியலமைப்பை வடிவமைத்த அனைவருக்கும் நாம் அஞ்சலி செலுத்துகிறோம். நமது பயணம் ஜனநாயகம், கண்ணியம் மற்றும் ஒற்றுமையின் அடிப்படையில் அமைவதை உறுதிசெய்வோம். இந்த இலட்சியங்களைப் பாதுகாப்பதிலும், வலுவான, வளமான இந்தியாவை கட்டமைக்க உழைப்பதிலும் நமது முயற்சிகளை இரட்டிப்பாக்க இந்த சந்தர்ப்பம் நம்மை ஊக்குவிக்கட்டும்” என தெரிவித்தார்.




## தமிழகத்தில் குடியரசு தினம் :



நாடு முழுவதும் குடியரசு தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வரும் நிலையில், தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, சென்னை மெரினா கடற்கரையில் தேசியக் கொடியை ஏற்றி அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரை பகுதியில் நேற்றுக் காலை 8 மணி அளவில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. விழாவில் தேசியக் கொடியை ஏற்றுவதற்காக வருகை தந்த ஆளுநர் ஆர்.என். ரவியை, முதல்வர் மு.க. ஸ்டாலின் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

இதையடுத்து, முப்படைகளின் உயர் அதிகாரிகள் ஆளுநருக்கு அறிமுகப்படுத்திவைக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக முதல்வர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் முன்னிலையில் மூவர்ணக்கொடியை ஆளுநர் ஆர்.என். ரவி ஏற்றினார்.

இதனையடுத்து, பல்வேறு சாதனைகளை புரிந்தோருக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் விருதுகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும், பல்வேறு துறைகளின் வாகன அணிவகுப்பும் நடைபெற்றது. பின் நாட்டுப் பண் இசைக்கப்பட்டு விழா இனிதே நிறைவடைந்தது.

## வளர்ச்சியை முன்னெடுக்க உறுதியேற்போம் - த.வெ.க. தலைவர் விஜய்



நாட்டின் 76ஆவது குடியரசு தினம் இன்று நாடு முழுக்க கொண்டாடப்பட்டு வருகிறது. குடியரசு தினத்தை முன்னிட்டு அரசியல் தலைவர்கள், பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வரிசையில், த.வெ.க. தலைவர் விஜய் குடியரசு தின வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட டுள்ள எக்ஸ் தள பதிவில், ”எண்ண ற்ற வீரர்களின் தியாகத்தால் விளைந்த சுதந்திர இந்தியாவில், அனைவருக்குமான உரிமைகளை நிலைநாட்ட, தனி அரசியலமைப்பு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட தினமான இந்தய குடியரசு தினத்தில், அதற்கு வித்திட்ட தியாகிகளை நினைவுகூர்ந்து, அனைவருக்குமான சம உரிமை மற்றும் வளர்ச்சியை முன்னெடுக்க உறுதியேற்போம்,” என்றார்.

## மகா கும்பமேளாவில்
## நடிகை மம்தா குல்கர்னி கண்ணீர் மல்க துறவறம்

பொலிவுட்டின் பிரபல நடிகையாக இருந்தவர் மம்தா குல்கர்னி. தமிழ், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்தியத் திரைப்படங்களிலும் நடித்துள்ளார். பட வாய்புக்கள் குறையத் தொடங்கிய காலங்களில் நிழல் உலக தாதாக்களுடன் இவருக்குத் தொடர்பு இருப்பதாக சர்ச்சைகளில் சிக்கினார். இதன் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய அவர் 34 வருடங்களுக்கு முன் வெளிநாட்டில் குடியேறினார்.



இதனைத் தொடர்ந்து கடந்த 2012ஆம் ஆண்டு உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்ற கும்பமேளாவுக்கு வருகை தந்த அவர் அதன் பின்னர் ஆன்மிக பாதையை தேர்ந்தெடுத்து அதில் ஈடுபாடு காட்டினார்.

அத்துடன், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவுகளையும் இட்டு வந்த தனது கடைசி பதிவில் அவர், நீண்ட வருடங்களுக்கு பின்னர் தாய்நாடான இந்தியா வருவதாகத் தெரிவித்திருந்ததுடன் பிரயாக்ராஜின் மகா கும்பமேளாவுக்கும் சென்று முழுமையான துறவறம் மேற்கொள்ளப் போவதாகவும் பதிவிட்டிருந்தார். இதன்படி அவர் நேற்று மகா கும்பமேளாவின் 16ஆம் பிரிவிக்கு தலைவரான ஆச்சார்யா டாக்டர் லஷ்மி நாராயண் திரிபாதியிடம் ஆலோசனை நடத்திய பின்னர் தனக்கு மகா மண்டலேஷ்வர் பதவி அளிக்கும்படியும், முழுத்துறவறம் மேற்கொள்ளத் தயார் எனவும் தெரிவித்தார். இதற்கான நிபந்தனைகளையும் நடிகை மம்தா குல்கர்னி ஏற்றதுடன் இறந்தபின் அவர்களது குடும்பத்தார் செய்யும் பிண்டதானச் சடங்கை அவர் தனக்குத் தானே செய்து கண்ணீர்மல்க துறவறம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## டங்ஸ்டன் சுரங்க திட்டம்: வழக்கு வாபஸ்



டங்ஸ்டன் சுரங்க திட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்தியவர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட 11,608 பேர் மீது பதிவு செய்யப்பட்ட 4 குற்ற வழக்குகளும் திரும்பப் பெறப்படுவதாக அறிவிப்பு. போராட்டம் நடத்தியவர்கள் மீதான வழக்குகள் திரும்ப பெறப்படும் என முதலமைச்சர் உறுதி அளித்த நிலையில் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது,

## அஜித் முதல் அஸ்வின் வரை குடியரசுதின பத்ம விருதுகள்





ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தை முன்னிட்டு பத்ம விருதுகள் அறிவிக்கப்படுவது வழக்கமான ஒன்றாகும். இந்த விருதுகள் நாட்டின் மிக உயரிய விருதுகளில் ஒன்றானவை ஆகும். பத்ம விருதுகளில் பத்மபூஷன் பத்மவிபூஷன், பத்மஶ்ரீ ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகள் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நடப்பு 2025 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு இன்று அறிவித்தது.

அந்தப் பட்டியலில் தமிழகத்தின் பல்வேறு மாநிலங்களை சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தகுந்த விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த விருதுகள் சிலருக்கு அறிவிக்கப்படும் என பலரும் எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில் பத்ம விருதுகள் அதிரடியாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி ஆறு பேருக்கு பத்ம விபூஷன் விருதுகளும் 13 பேருக்கு பத்மபூஷன் விருதுகளும் 113 பேருக்கு பத்மஶ்ரீ விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்தப் பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த பிரபல நடிகர் அஜித், கிரிக்கெட் வீரர் அஸ்வின் ஆகியோருக்கும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**பத்ம விபூஷன் விருது**

முன்னாள் நீதிபதி ஜகதீஷ் சிங் கேஹர்
ஒசாமு சுசுகி சாரதா சின்ஹா
துவ்வூர் நாகேஸ்வர ரெட்டி
லட்சுமிநாராயண சுப்பிரமணியம்
எம்.டி. வாசுதேவன் நாயர்
குமுதினி ரஜினிகாந்த் லக்கியா

**பத்ம பூஷன் விருது**

ராம்பகதூர் ராய்
சாத்வி ரிதம்பரா
சேகர் கபூர்
சோபனா சந்திரகுமார்
சுஷில் குமார் மோடி
வினோத் தாம்

**பத்மபூஷன் விருதுகள்**

PR
ஶ்ரீஜேஷ்
பங்கஜ்
படேல்
பங்கஜ்
உதாஸ்
எஸ்.
அஜித் குமார்
நந்தமுரி
பாலகிருஷ்ணா
ஏ. சூர்ய பிரகாஷ்
ஆனந்த் நாக்
பிபேக் தேப்ராய்
ஜதின் கோஸ்வாமி
ஜோஸ் சாக்கோ பெரியபுரம்
கைலாஷ் நாத் தீட்சித்
மனோகர் ஜோஷி
நல்லி குப்புசாமி செட்டி




**பத்மஶ்ரீ விருது பெற்ற தமிழ்நாட்டினர்**

குருவாயூர் துரை
தாமோதரன்
எம்டி ஶ்ரீனிவாஸ்
லட்சுமிபதி இராபம சுப்பையர்
அஸ்வின்
சந்திரமோகன்
ராதா கிருஷ்ணன் தேவசேனாபதி
சீனி விஸ்வநாதன்
வேலு ஆசான்

இவர்கள் உள்பட பலருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2025ம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் முக்கிய நபர்களுக்கு வழங்கப்படும் என பலரும் எதிர்பார்த்த நிலையில் சலருக்கு இந்த விருது வழங்கப்படவில்லை என்பது வேதனை அளிப்பதாக மா.அன்பழகன் கூறினார்.

இந்நிலையில், 2025ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. அந்த பட்டியலில் நடிகர் அஜித் குமார், ஆந்திர நடிகர் பாலகிருஷ்ணா, கிரிக்கெட் வீரர் அஸ்வின் உள்ளிட்டோர் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. மறைந்த மற்றும் வாழும் நபர்களுக்கு இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் நடிகர் அஜித் குமார் உள்ளிட்டோருக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியசாலை மீது ட்ரோன் தாக்குதல்:

## சூடானில் 70 பேர் உயிரிழப்பு





சூடானிலுள்ள வைத்தியசாலை மீது ட்ரோன்களை வீசி தாக்குதல் நடத்தியதில் ஆகக் குறைந்தது 70 பேர் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர்.

ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. அதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் போராடி வருகிறார்கள். இதனால் இருதரப்புக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இந்த உள்நாட்டுக் கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் பல்லாயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்நிலையில், சூடானின் டார்பூர் பகுதியில் உள்ள எல்-பஷாரில் செயல்பட்டு வந்த வைத்தியசாலை ஒன்றில் ஆளில்லா விமானம் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் பொதுமக்களில் ஆகக்குறைந்தது 70 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் 10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.




# பச்சோந்திகளை கொல்ல தாய்வான் அரசு உத்தரவு



உள்நாட்டு விவசாயத்தை அதிகளவில் சார்ந்துள்ள நாடு தாய்வான். அங்கு பெரியவகை பச்சோந்திகளின் (green iguanas) (பச்சை உடும்புகள்) எண்ணிக்கை அதிகரிப்பால் அந்நாட்டின் விவசாயம் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இதனால் 1.2 இலட்சம் பச்சோந்திகளை கொல்லும் முடிவை தாய்வான் அரசு அறிவித்துள்ளது.

தாய்வானின் வனவியல் மற்றும் இயற்கை பாதுகாப்பு அமைப்பின் கூற்றுப்படி, தீவின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் சுமார் 2,00,000 பெரியவகை பச்சோந்திகள் இருக்கின்றன. கடந்த ஆண்டு சுமார் 70,000 பெரியவகை பச்சோந்திகளை சிறப்பு வேட்டை குழுவினர் கொன்றனர். ஒரு பச்சோந்தியை கொல்வதற்கு தலா 15 டொலர்கள் அவர்களுக்கு சன்மானமாக வழங்கப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆண்டு 1.2 இலட்சம் பச்சோந்திகளைக் கொல்ல தாய்வான் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்வகை பச்சோந்திகள் வாழும் கூடுகளை இனங்காண உள்ளூர் மக்கள் உதவ வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளை தாயகமாகக் கொண்ட இவ்வகை பச்சோந்திகள் தாய்வானில் அதிக அளவில் பெருகி, உள்ளூர் பயிர்களுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன. தாய்வானில் இயற்கையாகவே வேட்டையாடும் எந்த உயிரினமும் அதிகம் இல்லாதது இந்த பச்சோந்திகளின் பெருக்கத்துக்கு வழிவகுத்துள்ளது. முதலில் இவை தாய்வானுக்கு செல்லப்பிராணிகளாக கொண்டுவரப்பட்டன. இவற்றை ஒரு வருடத்திற்கு மேல் கூண்டில் வைத்து பராமரிக்க முடியாது. எனவே அவை வளர்ந்த பின் , மக்கள் அவற்றை காட்டில் விட்டனர். தொடர்ந்து இவை உள்ளூர் விவசாய வயல்களையும் சுற்றுச்சூழலையும் சேதப்படுத்தத் தொடங்கின. பெரியவகை பெண் பச்சோந்திகள் ஒரே நேரத்தில் 80 முட்டைகள் வரை இடும். அவை 20 ஆண்டுகள் வரை வாழும். சுமார் 5 கிலோகிராம் வரை எடை கொண்டிருக்கும். தற்போது 1.2 இலட்சம் பச்சோந்திகளைக் கொல்ல அரசு முடிவெடுத்துள்ள நிலையில் மீன்பிடி ஈட்டிகளைப் பயன்படுத்துவது அவற்றை கொல்ல மிகவும் “மனிதாபிமான வழி” என தெரிவித்துள்ளது.

### நெதர்லாந்து கண்காட்சியில்

# ஒல்லாந்தர் கால கலைப்பொருட்கள் திருட்டு

நெதர்லாந்து அருங்காட்சியகத்தில் இருந்து சனிக்கிழமை அதிகாலை இரவு நடந்த சோதனையில் நான்கு பழங்கால தங்க கலைப்பொருட்கள் திருடப்பட்டன.

அசெனில் உள்ள ட்ரெண்ட்ஸ் அருங்காட்சியகத்தில் தங்கம் மற்றும் வெள்ளியால் செய்யப்பட்ட விலைமதிப்பற்ற ருமேனிய நகைகளின் கண்காட்சி நடைபெற்ற வேளையிலேயே திருடர்கள் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து பழங்கால தங்க கலைப்பொருட்களை திருடியுள்ளனர்.



ருமேனியாவின் கலாச்சார அமைச்சகம், புக்கரெஸ்டில் இருந்து ஒல்லாந்தர் அருங்காட்சிய கத்திற்கு கடனாகப் பெறப்பட்ட திருடப்பட்ட பொருட்களை மீட்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதியளித்துள்ளது.

டிரண்ட்ஸ் அருங்காட்சியகத்தின் இயக்குநர் ஹாரி துபன், இந்த கொள்ளைச் சம்பவத்தினால் ஊழியர்கள் தீவிரமாக அதிர்ச்சியடைந்துள்ளனர் எனவும் 170 ஆண்டுகால வரலாற்றில் இது மிகப்பெரிய சம்பவம் என தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் தடயவியல் ஆய்வுகளை மேற்கொண்டதுடன் சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தனர். மேலும், அருகில் உள்ள வீதியில் தீப்பிடித்து எரிந்த வாகனம், கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் வாகனம் குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைக்கு உதவுவதற்காக சர்வதேச காவல் நிறுவனமான இன்டர்போலை பொலிஸார் அழைத்துள்ளனர்.

அருங்காட்சியகத்தில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், நான்கு “தலைசிறந்த தொல்பொருள் படைப்புகள்” திருடப்பட்டதாகக் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய தேசிய தினத்தில் நினைவுச்சின்னங்கள் சிதைப்பு

ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியா தேசிய தின கொண்டாட்டங்களுக்கு முன்னதாக மெல்போர்னில் இரண்டு வரலாற்று சிலைகள் சேதப்படுத்தப்பட்டன. நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பழங்குடியின குழுக்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

நாட்டின் இரண்டாவது பெரிய நகரத்தை நிறுவியவரும், பழங்குடியின மக்களைக் கொன்று குவித்தவருமான, காலனித்துவவாதியான ஜான் பேட்மேனின் சிலை பாதியாக வெட்டப்பட்டது, அதே சமயம் முதல் உலகப் போரில் அவுஸ்திரேலிய வீரர்களை நினைவுகூரும் நினைவுச்சின்னம் சிவப்பு நிறத்தில் பூசப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமையன்று (26) அவுஸ்திரேலியாவின் தேசிய தினம் பல பழங்குடி அவுஸ்திரேலியர்களுக்கு ஒரு சாதாரணமான நாளாகும், ஏனெனில் இது கேப்டன் ஜேம்ஸ் குக் சிட்னி கோவில் தரையிறங்கிய நாளையும் ஆங்கிலேயர்களால் ஆமற்கொள்ளப்பட்ட நாட்டின் காலனித்துவத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது.



அவுஸ்திரேலிய தேசிய தினத்தினை எதிர்க்கும் விதமாக எதிர்ப்பாளர்கள் பலஸ்தீனியக் கொடிகளை ஏந்தியிருந்தனர், மேலும் பேச்சாளர்கள் பழங்குடியினருக்கும் பலஸ்தீனிய அனுபவங்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் குறித்துப் பேசினர். சிட்னியில் நாள் முழுவதும் ஆமேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகளில் 15,000 பேர் பங்கேற்றதாக காவல்துறை மதிப்பிட்டுள்ளது. மெல்போர்னின் மத்திய வணிக மாவட்டத்தில், சுமார் 25,000 பேர் வீதிக்கு வந்திருப்பதாக பொலிஸார் மதிப்பிட்டுள்ளனர்.

போராட்டங்களில் பேசிய பேச்சாளர்கள், பூர்வகுடியினருக்கு முக்கியமான பிரச்சினைகள், பொலிஸ் காவலில் அதிக எண்ணிக்கையிலான பழங்குடியின மரணங்கள், காணாமல் போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட பழங்குடியினப் பெண்கள், நில உரிமைகள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஆதரவாக ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான அழுத்தம் உள்ளிட்டவை பற்றி தெரிவித்தார்கள்.

பூர்வகுடி மக்களுக்கான அரசியலமைப்புக் குரலை நாடாளுமன்றத்தில் நிலைநிறுத்த பிரதமர் அந்தோனி அல்பானீஸ் மேற்கொண்ட முயற்சிகள் 2023 ஆம் ஆண்டு வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டன.

அவுஸ்திரேலிய தினத்தை அவுஸ்ரேலியர்கள் தங்கள் நாட்டில் கொண்டாட பயப்பட வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளார். நாடு ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட வேண்டும் என்றும், மே நடுப்பகுதியில் நடக்க வேண்டிய தேர்தலில் தான் பிரதமரானால், அரசாங்க செய்தியாளர் சந்திப்புகளில் இருந்து பூர்வகுடிகள் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெயிட் தீவுகளின் கொடிகளை அகற்றுவேன் என்றும் டட்டன் தெரிவித்துள்ளார்.

# உலக நாடுகளுக்கான நிதியுதவிகளை நிறுத்திய ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த 20ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டார். பல அதிரடி உத்தரவுகளை வெளியிட்டு வரும் ட்ரம்ப், உலகின் பல்வேறு நாடுகளுக்கு அளித்து வந்த யுஎஸ்-எய்ட் (USAID) நிதி உதவியை நிறுத்த உத்தரவிட்டுள்ளார்.



சுகாதாரம், கல்வி, மேம்பாடு, வேலைவாய்ப்பு பயிற்சி, ஊழல் எதிர்ப்பு, பாதுகாப்பு, ஊட்டச்சத்துக் குறைபாட்டை ஒழித்தல், நோய் பாதிப்பைத் தடுக்க உதவுதல் உள்ளிட்டவற்றின் வளர்ச்சியில் பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகளுக்கு உலக வல்லரசான அமெரிக்காவின் நிதி உதவி கிடைத்து வந்தது. யுஎஸ்-எய்ட் (USAID) என்ற சுயாதீன அமைப்பு இதற்காக உருவாக்கப்பட்டது. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஷின் நிர்வாகத்தின் கீழ் 2003இல் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை செயல்பட்டு வந்தது. இந்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இத்தகைய உதவிகளுக்கான நிதியை 90 நாட்களுக்கு முடக்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. மேலும் புதிதாக இனிமேல் ஏதும் நிதி வழங்கப்படாது எனவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சூடான் உள்ளிட்ட கடும் பஞ்சத்தால் வாடும் நாடுகளுக்கு உணவு வழங்குவதற்கான திட்டங்களுக்கு மட்டுமே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இஸ்ரேல் மற்றும் எகிப்து நாடுகளுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் ஆண்டுதோறும் அமெரிக்காவிடமிருந்து இராணுவ உதவியாக 3.3 பில்லியின் டொலர் பெறுகிறது, எகிப்து 1.3 பில்லியின் டொலர் பெறுகிறது. மத்திய கிழக்கில் அமெரிக்காவின் ஸ்திரத்தன்மையை இவ்விரு நாடுகளும் உறுதி செய்வதால் அவற்றின் நிதியில் ட்ரம்ப் கைவைக்கவில்லை என்று அரசியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

நிதியுதவி அளிக்கத் தடை அமுலில் உள்ள 90 நாட்களுக்குப் பின் உத்தரவை நீடிப்பதா அல்லது விலக்கிக்கொள்வதா என்று முடிவெடுக்கப்படும் என்று தெரிகிறது. இதற்கிடையே பிராந்திய பிரச்சினைகளுக்கு தீர்வு காண அமெரிக்காவைப் பெரிதும் நம்பியுள்ள உக்ரேன், தாய்வான் மற்றும் எஸ்டோனியா, லிதுவேனியா, லாட்வியாவை உள்ளடக்கிய பால்டிக் நாடுகளை இந்த தடை மிகவும் பாதிக்கும். ரஷ்யாவுடனான போரில் உக்ரேனுக்கு ஜோ பைடன் அதிக உதவிகளை அளித்து வந்த நிலையில் ட்ரம்ப்பின் நிதி நிறுத்தம் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் தற்போதைக்கு போர்க்கால உதவிகள் ஏதும் நிறுத்தப்படவில்லை, கடவுளுக்கு நன்றி என உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் பக்கத்தில் ஆறுதல் அடைந்துள்ளார்.

# தாய்லாந்தில் காற்று மாசுபாடு 352 பாடசாலைகள் மூடப்பட்டன

காற்று மாசுபாட்டுக்கு முக்கிய காரணமாக கருதப்படும் விவசாய கழிவுகளை எரிக்க தாய்லாந்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாங்கொக்கில் கனரக வாகனங்களை ஓடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.



ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையின்படி உலகின் காற்று மாசுபாடு அடைந்த நகரங்கள் பட்டியலில் தாய்லாந்து தலைநகர் பாங்காக் 7ஆவது இடத்தை பிடித்தது. அயல் நாடான வியட்நாம், கம்போடியாவில் உள்ள நகரங்களும் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன. அதாவது அங்கு வசிப்பவர்கள் மோசமான காற்றை சுவாசிப்பதால் நுரையீரல் புற்றுநோய் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி காற்று மாசுபாட்டுக்கு முக்கிய காரணமாக கருதப்படும் விவசாய கழிவுகளை எரிக்க தாய்லாந்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என உள்துறை அமைச்சர் அனுடின் சார்ன்விரகுல் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோல் மாணவர்களின் நலன் கருதி தலைநகர் பாங்காக்கில் 352 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் தங்களது ஊழியர்களை வீட்டில் இருந்தே பணிபுரிய அனுமதிக்கும்படி தனியார் நிறுவனங்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அதேபோல் தலைநகர் பாங்காக்கில் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து காற்று மாசுபாட்டை குறைக்க அனைவரும் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இதற்காக அடுத்த ஒரு வாரத்துக்கு பஸ், ரயில் போன்றவற்றில் இலவசமாக பயணம் செய்ய போக்குவரத்து அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

# இலங்கை சைக்கிளோட்ட சம்மேளன தலைவருக்கு விதிக்கப்பட்டிருந்த வாழ்நாள் தடை நீக்கம்



இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், சர்வதேச சைக்கிளோட்டப் போட்டி நடுவருமான என். கருணாரத்ன மற்றும் இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்தின் 1 – மூன்று முன்னாள் அதிகாரிகள் மீது விளையாட்டு அமைச்சினால் விதிக்கப்பட்ட வாழ்நாள் தடையை தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே நீக்கியுள்ளார்.

கருணாரத்ன தலைவராக இருந்த காலத்தில் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய நிஹால் குலசேகர மற்றும் பொருளாளராக இருந்த சேனக ரணசிங்க ஆகியோரின் தடைகளும் நீக்கப்பட்டுள்ளன.

சைக்கிளோட்ட சம்மேளனத்தில் கருணாரத்ன தலைவராக பணியாற்றிய காலத்தில் (2018-19) ஆண்டுக்கான கணக்கறிக்கையை சமர்ப்பிக்காத குற்றச்சாட்டை முன்வைத்து வாழ்நாள் தடைவிதித்ததோடு எந்தவொரு தேசிய விளையாட்டு சங்கத்திலும் பதவிகளை வகிக்க முடியாத வகையில் 2020 முதல் இவர்கள் மீது இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த தடை தொடர்பில் தற்போதைய விளையாட்டு இயக்குநர் ஜெனரல் பேராசிரியர் சேமால் பெர்னாண்டோ வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த அதிகாரிகள் மீதான தடை நீக்கப்பட்டு,அவர்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டதாக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கருணாரத்ன தெற்காசியாவில் இருக்கும் ஒரே ஒரு சர்வதேச சைக்கிளோட்ட நடுவராகவும் ஆசிய சைக்கிளோட்ட சம்மேளனத்தின் தற்போதைய தலைமை தொழில்நுட்ப அதிகாரியாகவும் செயற்படுகிறார்.

கருணாரத்ன உள்ளிட்ட அதிகாரிகளுக்குக் கடந்த அரசின் விளையாட்டு அமைச்சு தண்டனை வழங்க கையாண்ட விதத்தை ஏற்றுக்கொள்ளாத சர்வதேச சைக்கிளோட்ட ஒன்றியம் மற்றும் ஆசிய சைக்கிளோட்ட ஒன்றியம், இன்றுவரை அச் சம்மேளனங்களின் இணையதளத்தில் இலங்கை தலைவராக கருணாரத்னவின் பெயரே குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு தேசிய ஒலிம்பிக் குழுவும் இன்னும் அவரது அங்கீகாரத்தை அதிகாரப்பூர்வமாகத் திரும்பப் பெறவில்லை.

இதற்கிடையில், சைக்கிளோட்ட சம்மேளனத்திற்குச் சொந்தமான ரூ. 5.6 மில்லியன் மதிப்புள்ள சொத்தை தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறி, இந்த மூன்று அதிகாரிகளுக்கு எதிராக அப்போதைய விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் தாக்கல் செய்த வழக்கை மீள விசாரிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம், குருந்துவத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டது. இந்த வழக்கு விசாரணையை விரைவுபடுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு ஏப்ரல் 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதற்கிடையில், இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு வாட் (பயிற்சி) சைக்கிள்களை இலஞ்சமாகப் பெறப்பட்டதாகவும், ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டி, விளையாட்டு அமைச்சினால் கடந்த காலத்தில் மற்றொரு முறைப்பாடும் பொலிஸில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், இது இலங்கைக்கு வழங்கப்பட்ட நன்கொடை என்பதால், இலங்கையில் மேற்கண்ட அதிகாரிகள் மீது சுமத்தப்பட்ட இலஞ்சம் மற்றும் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டுகளை நிராகரித்து சர்வதேச சைக்கிளோட்ட சம்மேளனம் அதிகாரப்பூர்வ அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.




# அரையிறுதியில் இருந்து வெளியேறிய ஜோகோவிச்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆடவர் அரையிறுதியில் இருந்து நேற்று முன்தினம் ஜோகோவிச் காயத்தால் பாதியில் வெளியேறினார்.

99 முறை சாம்பியன் பட்டமும் 24 முறை கிராண்ட் சிலாம் பட்டம் வென்ற செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச் முதல் அரை இறுதிப் போட்டியில் ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரெவ் உடன் மோதினார்.

முன்னதான காலிறுதிப் போட்டியில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்ட ஜோகோவிச் தடுமாற்றத்துடன் முதல் செட்டை எதிர்கொண்டார். பெரும் போராட்டத்துக்கு பின் முதல் செட்டில் 7-6 என்ற புள்ளிக் கணக்கில் ஸ்வெரெவ் கைப்பற்றினார். ஆனால் அதன்பின் வலி தாங்க முடியாமல் சிரமப்பட்ட ஜோகோவிச் ஆட்டத்தில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். ஸ்வெரெவுக்கு கைகொடுத்து வாழ்த்தி விட்டு அவர் அரங்கை விட்டு அகன்றார். இதனால், ஸ்வெரெவ் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். 99 முறை சாம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச் கொஞ்சம் சிரமப்பட்டு விளையாடிருந்தால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று 100 வது சாம்பியன் பட்டம் வென்றிருப்பார்.

மேலும் 25வது முறை கிராண்ட் சிலாம் பட்டம் வென்ற அவுஸ்திரேலிய டென்னிஸ் வீராங்கனை மார்க்கரெட் கோர்ட்டின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பையும் அவர் நழுவவிட்டார் என பலர் அதிருப்தி தெரிவிக்கின்றனர். எனவே அவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தனது எம்ஆர்ஐ ஸ்கேன் ஐ ஜோகோவிச் பகிர்ந்துள்ளார்.

# முகமது ஷமியை காத்திருப்பில் வைத்த கம்பீர்

முகமது ஷமி இந்திய ரி20 அணியில் தேர்வு செய்யப்பட்ட பிறகும் அவருக்கு போட்டிகளில் ஆடும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

கெப்டன் சூர்யகுமார் யாதவ் மற்றும் பயிற்சியாளர் கவுதம் கம்பீர் தான் இதற்கு காரணமா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்ற சந்தேகம் பலருக்கும் உள்ளது.

முகமது ஷமி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இந்திய அணியில் இடம்பெறவில்லை. அவருக்கு காலில் வலி ஏற்பட்ட பின்னர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பின் பயிற்சி மேற்கொண்டு வந்தார். 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான அணியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.




அதற்கு முன்னதாக பயிற்சி பெறும் வகையில் அவர் இங்கிலாந்து அணிக்கு எதிரான ரி20 தொடர் மற்றும் ஒருநாள் தொடரில் அவரது பெயர் சேர்க்கப்பட்டது. அவர் ரி20 தொடரின் முதல் போட்டியிலேயே பிளேயிங் லெவனில் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

முகமது ஷமி ஏன் இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் இரண்டு ரி20 போட்டிகளிலும் விளையாடவில்லை என்பது பற்றி இந்திய அணி வட்டாரத்தில் இருந்து சில தகவல்கள் கிடைத்துள்ளன. முகமது ஷமிக்கு இடது முழங்காலில் லேசான வலி இருப்பதால் அவரால் முழு வேகத்தில் பந்து வீச முடியவில்லை என கூறப்படுகிறது.

அதன் காரணமாகவே அவரை போட்டிகளில் பயன்படுத்தாமல் காத்திருப்பில் வைத்துள்ளது. இப்போதே முகமது ஷமியை பந்து வீச வைத்து அவருக்கு ஏற்பட்டிருக்கும் காயம் மேலும் பெரிதானால் அவரால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் விளையாட முடியாமல் போகலாம்.

எனவே,ரி20 தொடரில் அனைத்து போட்டிகளிலும் அவரை விளையாட வைக்காமல் ஒன்று அல்லது இரண்டு போட்டிகளில் மட்டும் விளையாட வைக்க பயிற்சியாளர் கவுதம் கம்பீர் திட்டமிட்டு இருக்கிறார். இந்த முடிவை அவர் மட்டும் எடுக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. தேசிய கிரிக்கெட் அகாடமியின் ஆலோசனையும் இதில் அடங்கியுள்ளது.

ரி20 தொடரில் ஒன்று அல்லது இரண்டு போட்டிகளில் விளையாட இருக்கும் முகமது ஷமி, அடுத்து நடைபெற உள்ள ஒரு நாள் தொடரில் இரண்டு போட்டிகளிலாவது விளையாடுவார் என கூறப்படுகிறது. அதன் பின்னர் அவர் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்பார். சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மொத்தம் ஐந்து போட்டிகள் மட்டுமே உள்ள நிலையில் அவர் தனக்கு ஏற்பட்டிருக்கும் வலியுடன் ஊசி செலுத்திக்கொண்டு அந்த ஐந்து போட்டிகளிலும் விளையாடி முடித்து விடுவார் என கூறப்படுகிறது.

# ஐசிசியின் சிறந்த வீரராக கமிந்து மெண்டிஸ் தேர்வு




இலங்கையின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர் கமிந்து மெண்டிஸ் ஐசிசியின் ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரருக்கான விருதை பெற்றுள்ளார். 2024 ஆம் ஆண்டில், மெண்டிஸ் அனைத்து வகையான போட்டிகளிலும் 1,451 ஓட்டங்களை பெற்று 50க்கும் அதிகமான சராசரியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் முத்திரை பதித்தார்.

சேர் டான் பிரட்மேனின் 13 இன்னிங்ஸ் மைல்கல்லைப் பின்பற்றி ஆடவர் டெஸ்டில் 1000 ஓட்டங்களை மிக விரைவாக எடுத்த மூன்றாவது வீரர் ஆவார். கடந்த ஆண்டு டெஸ்ட் அரங்கில் மெண்டிஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் ஒன்பது டெஸ்டில் 74.92 சராசரியில் 1049 ஓட்டங்களைக் குவித்தார். கடந்த ஆண்டில் 1000 ஓட்டங்களுக்கு மேல் அடித்த ஆறு வீரர்களில் ஒருவரானார். அவரது இந்த எண்ணிக்கையில் ஐந்து சதங்கள் மற்றும் மூன்று அரைசதங்கள் அடங்கும்.

மெண்டிஸின் மிக அபாரமான ஆட்டத்திறன், நியூசிலாந்துக்கு எதிராக காலியில் நடந்த இலங்கையின் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், அவர் முதல் இன்னிங்ஸில் 182 ஓட்டங்களை பெற்றதாகும்.

16 பவுண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களை உள்ளடக்கிய இந்த அற்புதமான ஓட்டம் இலங்கை 602-5 என்ற அபாரமான ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்ய உதவியது. அவரது அபார துடுப்பாட்டத்தில் இலங்கை 2-0 என்ற கணக்கில் தொடரை வெற்றி கொள்வதில் முக்கிய பங்கு வகித்தது. அத்தோடு அவருக்கு ஆட்ட நாயகன் விருதையும் பெற்றுத்தந்தது.

# ஐ.சி.சியின் சிறந்த ரி20 கிரிக்கெட் வீராங்கனை




ஐ.சி.சி.2024-ம் ஆண்டின் சிறந்த ரி20 கிரிக்கெட் வீராங்கனையாக நியூசிலாந்தின் மெலி கெர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த ஆண்டு 18 போட்டிகளில் விளையாடி 387 ஓட்டங்கள் மற்றும் 29 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட், ஒருநாள், ரி20 அணிகள் மற்றும் சிறந்த வீரர், வீராங்கனைகளை தேர்வு செய்து கௌரவித்து வருகிறது. ஆண்டு முழுவதும் வீரர், வீராங்கனைகள் சிறப்பாக செயல்பட்ட விதத்தை கணக்கில் கொண்டு இந்த கௌரவத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அந்த வகையில் 2024-ம் ஆண்டின் சிறந்த ரி20 வீராங்கனை விருதுக்கு 4 பெயர்களை ஐ.சி.சி. பரிந்துரைத்திருந்தது. அதன்படி இலங்கையின் சமரி அத்தபத்து, தென் ஆபிரிக்காவின் லாரா வோல்வோர்ட், நியூசிலாந்தின் மெலி கெர், அயர்லாந்தின் ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

# கிண்ணியா உதைபந்தாட்ட சம்மேளன தலைவராக முகம்மட் ஜான் ஆஷிக் தெரிவு



(சீனக்குடா செய்தியாளர் கியாஸ்)

2025 ஆம் ஆண்டின் கிண்ணியா உதைப்பந்தாட்ட சம்மேளன தலைவராக முகம்மட் ஜான் ஆஷிக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2025 ஆண்டுக்கான கிண்ணியா உதைப்பந்தாட்ட சம்மேளனத்துக்கு நிர்வாக குழுவைத்

தெரிவு செய்வதற்கான கூட்டம் சனிக்கிழமை(25) கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது, தலைவர் பதவிக்கு பலர் போட்டியிட்டதால், வாக்கெடுப்பின் மூலம் இவர் தெரிவு செய்யப்பட்டார்.

கிண்ணியா மத்திய கல்லூரியின் விளையாட்டு பயிற்றுவிப்பாளரான இவர், இக் கல்லூரியின் உதைப்பந்தாட்ட அணிகளின் தேசிய வெற்றிக்கும் பாடசாலைக்கும் முக்கிய பங்களிப்பை வழங்கியிருக்கின்றார்.

2013 ஆம் ஆண்டு தேசிய உதைப்பந்தாட்ட நடுவர் வளவாளராக கடமையாற்றிய இவர், உதைப்பந்தாட்ட நடுவர் தரம் 2 பரீட்சையில் சித்தியடைந்து நடுவராகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

மேலும், 2024 ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச சுபோடோ கிண்ண உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றி இலங்கையின் 17 வயதிற்குட்பட்ட அணிக்கு உதவிப் பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றியவராவார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 27ம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.